Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஜூலை மீ 5உ

ஏழையாய்

அந்த 9ந் சிறந்த [illegible] கிடைக்கிறேன்!

[illegible]

பண்டு இன்று [illegible] வாலிப நாடார் மகாநாட்டுக்குக் [illegible] வகிக்கும் பேர்களைத் தெரிவுக்கு வழங்கியவரான [illegible] கூட்டத்தார்க்கும், எனது அன்பர்களுக்கும் எனது நன்றி மறவாமை வணக்கம். அடியேன் ஆற்றப் புகுந்த கொண்டில் குற்றங் குறைகள் நிழலாம். அவைகளைப் பொறுத்து மன்னிக்குமாறு உங்களை வேண்டுகிறேன்.

இக்காளில் எனது நாட்டின் கிளர்ச் தொடர்ந்து சமுதாயமும் இயக்கங்களிலும் ஊனர்ச்சிகளிலும் கலவாது ஒதுங்கி நிற்கும் அடியேன், இம்மகாநாடு போற்கு பணியாற்ற ஒருப்பட்டதற்கு த்தலையாய காரணங்கள் இரண்டு. ஒன்று "வாலிபம்" என்பது; மற்றொன்று அதைத் தொடர்ந்து பிற்கும் "நாடார் மகாநாடு" என்பது. இவையிரண்டும் என்னை இம்மகாநாட்டுக்குப் போதருமாறு பிடர் பிடித்து உந்தின.

இளமை

இளமை எதி! இன்பமா! இன்ப முழிவா? இன்பக் கூர்தலா? என்னென்று சொல்வது? இளமை நெஞ்சைக் கவர்வதுபோல் வேறேதேனுக் கவர்கிறதா? இளமை யில்லையேல் உலகில் இன்பமேது? புல் பூக்களிலும், செடி கொடிகளிலும், பறவைவிலங்குகளிலும், மக்களிலும் இளமையரும்பிக் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்து, இன்ப அமிழ்தால் அகவிருந்து நல்கிவருவதை எவரே அறியார்? உலகை இன்பத்தால் ஓம்பி வருவது இளமை இளமையே.

கடவுள் உணர்விற்கு உறையுளாயிருப்பது இளமையென்று கூறல் மிகையாகாது. இளமையின் கடவுட்டன்மையை நம் முன்னோர்கள் தெரிந்தேயிருந்தார்கள். பண்டைத் தமிழர்கள் இளமையைக் கடவுள் உறுகளுள் ஒன்றாகக் கொண்டது நண்டு நினைவிற்கு வருகிறது. "என்றும் இளையாய்" எனவும், "மணங்கமழ் தெய்வச் இளைஞங்காட்டி" எனவும் வருவதும் க்க சேனர் உரைகளை நோக்குக.

மக்கள் அகவைகளுள் விழுமியது இளமை என்பது எவரும் அறிந்த தொன்று. இளமையே வாழ்வுப்படிக்கொல்லாம் அடியாயிருப்பது. இளமையே வாழ்வின்கு அடி கோலுவது; இளமையே எல்லவற்றிற்கும் ஊற்று. இளமைக் கால் கொண்டே வாழ்வெனும் நிலையம் எழுகிறது. ஒருவனது ஆக்கமுக்கேடும் அவனது இளமை வொழுக் கத்தையே பொறுத்து நிற்றலும் நண்டுக் கருதத்தக்கது.

இளமையில் பகைமை, பொறுமை முதலியன தெளிதல் அரிது. அதன் கண் அன்பும் அருளும் போலிதல் இயல்பு. பகைமை, பொறுமையில்லாவிடத்திலேயே ஒற்றுமைக்கு இடனுண்டு. ஆகவே இளமை ஒற்றுமைக்கு உறுகருவியா யுதவுவ தென்க. ஒற்றுமை என்ன செய்யாது? ஒற்றுமை எல்லாஞ் செய்யும். அவ்வொற்றுமைக் குரிய இளங் குழு காண எவரே விழையார்?

உலக சரித்திரத்தை நோக்குழி இளைஞர்கள் முயற்கியாலேயே பல நாடுகள் ஆக்க முற்ற உண்மை செவ்விதிற் புலனாகும். மாவினி முதலிய தேசபக்தர்கள், இளைஞர்கள் இயக்கத்தின் வாயிலாகவே நங்கள் நாட்டுக்கு விடுதலை கண்டது உங்கட்குத் தெரியும். அவ்வரலாறுகள் சரித்திரத்தில் பலபடக் கிடக்கின்றன. அவைகளை விரிக்கிற் பெருகும். துருக்கி வளர்பிறையென வளர்ந்து வருவதையும், சீனத்துக்குற்ற சிறுமை பொன்றி வருவதையுங் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இக்காட்சிக்குக் காரணம் யாது? இளைஞர் இயக்கமன்றோ?

எக்காரணத்தாலேனும் நாடுகள் சவலையுறுமேல், அச்சவலை போக்கு மாற்றல் அவ்வக் காட்டில் இளைஞரிடு [illegible] வேண்டுமல்லவோ. அது

வாலிப நாடார் 2-வது மகாநாடு,

அருப்புக்கோட்டை.

திருவாளர். திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்களின் அக்கிராசனப் பேருரை.

வல்ல இளைஞரியகள் நண்டும் மகாநாடு என்னுங் கருத்துக்கொண்டே இம்மகாநாடு நோக்கத் துணிந்தேன்.

நாடார்.

நாடார்கள் என்போர் மிக்க தொன்மையாய்ந்த தமிழ்க் குடிமக்களிற்சேர்ந்தவர். அன்னார் பண்டைப் பெருமையும் பிறவும் பல மகாநாடுகளிற் பேசப்பட்டிருக்கின்றன. நாடார்கள் பேச்சுடன் நிலவாது, ஆக்கத்துறை நண்ணிச் செயலில் பல வினைகள் நிகழ்த்தி வருவது நாட்டின் நலத்தில் நாட்டமுடையார்க்குக் கழிபேருவகை யூட்டாகிற்கிறது. நாடார்கள் பூசல், பிணக்கு, போர் முதலிய கேடுவிளை விளைக்கும் அழிவு வினையாற்றாது, ஆக்க வினையாற்றி வருவது போற்றற் குரியது. நாடார்கள் முயற்சியால் அவர்கள் மரபு மட்டும் நலனுறுகிறது என்று எவருங் கருதா திருப்பாராக. நாடார்கள் ஊக்கத்தால் நாடும் உடன் வளர்ந்து வருகிறது. நாடார் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. அந்நம்பிக்கை என்னை ஈங்கு ஈர்த்தது.

பாண்டி நாடு.

இம்மகாநாடு இளைஞர்களுடையதாகலின் இதன்கண் இளைஞர்க்குள்ள பொருள் வைத்திப் பேசலே சால்புடைத்து. நங்கள் நாட்டின்தொன்மை, நாகரீகம், முன்னோர் வரலாறு முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுவது இளைஞர்களின் முதற் கடமை. அவைகளுடன் வேறுநாடுகளின் பழைய வரலாறுகளையும் ஆராய்ந்துணரல் அறிவிற் கழகு. சில வேளைகளில் பழையன சில இளைஞ குலங்கிற்குப் புத்துயிரளித்தலுமுண்டு. சில விடங்களில் பண்டைப் பெருமை யுணர்வு புதுப் புதுச் சக்திகளைக் கிளப்பி நலஞ் செய்தலுமுண்டு.

உலகில் சரித்திரம் அறிஞரால் எழுதப்படுவதன் நோக்கமென்னே? வாழ்விற்கு அதன் துணை வேண்டற்பாலது எனபதை ஒவ்வொன்றிற்கு வாழ்வில் அனுபவம் பெற்று நல்லன தீயன காண்பதற்குள் வாழ்வு முடிவெய்நும். சரித்திரத் துணை யொன்றின் அதன்கண் போக்துள்ள நல்லன வாழ்வில் கொள்ளத்தக்கன இன்ன இன்ன என்றும் தீயன வாழ்வில் நீங்கத்தக்கன இன்ன இன்ன என்றும் அறிவுறுத்தும். ஆதலால் சரித்திர ஆராய்ச்சி இளைஞர்க்கு இன்றியமையாதது என்று வலியுறுத்துகிறேன்.

இளைஞர்களே! உங்கள் தாய் நாட்டின் ஒருகூறாயிருப்பதும், உங்கள் முன்னோர்கள் பெருமைக்கு நிலைக்களனாகி நின்றதுமாயுள்ள பாண்டி நாட்டின் தொன்மை நாகரீகம், வழக்கவொழுக்கங்கள் முதலியன உங்கள் முன்னேற்றத்துக்கு ஒருபெருங் சக்தி வழங்குமென்பதில் ஐயமில்லை. 'அந்நாட்டின் பண்டைப் பெருமையை விரித்துக்கூற இம்மகாநாடும் இடந்தராது; போதிய நேரமுமில்லை. பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேலை முதலிய தமிழ்ப்பொருட்காட்சிகளிருக்கின்றன. அவைகளில் பழைய பாண்டி நாட்டைக்கண்டு ஊக்கங் கொள்க. அப்பெரு நாட்டின் பழைய நிலைகளில் எடுத்துக காட்டாக இரண்டொன்று குறிப்பிடுகிறேன்.

பாண்டி நாட்டின் பெரும் பகுதி கடலால் விழுங்கப்பட்டது. இப்பொழுதுள்ள (மதுரை—இராமநாதபுரம்—[illegible] கொண்ட) நிலப்பரப்பு பழம்பாண்டியின் ஒரு கூறேயாகும்.

பாண்டி நாட்டின் தொன்மை, சரித்திர காலத்தையுங் கடந்து நிற்பது. இராமாயண பாரதங்களில் பாண்டி நாட்டின் மாண்பு பேசப்பட்டிருக்கிறது. மகா வமிசத்தில் பாண்டி நாட்டின் மணங் கமழ்கிறது. அசோகன் சாசனத்தில் பாண்டி நாடு இடம் பெற்றிருக்கிறது. மெகஸ்தினிஸ் குறிப்பிலும் பாண்டி நாடு மிளிர்கிறது.

இத்தொன்மை வாய்ந்த நாட்டைப் பரந்த பாண்டி மன்னர்களின் வீரம், நீதி, அன்பு, அருள் முதலியன பழைய சங்கப் பாக்களாகப் பரந்து நிற்கின்றன. அப்பாநூல்களை இக்கால அறிஞர் லெர் ஆய்ந்து சரித்திர உலகம் ஏற்றுக்கொள்ளும் முறையில் நூல் பல யாத்துள்ளார். அவைகளுடன் உறவு கொள்ள வேண்டுவது உங்கள் கடமை யென்று நான் சொல்ல வேண்டுவதில்லை.

பாண்டி மன்னரின் பெருமை யுணர்ந்த ஈண்டொரு சிறு குறிப்பு பொறிக்க விரும்புகிறேன். கண்ணகி வரலாறு உங்கட்குத் தெரியும். அக்கற்புக்கடவுள் பாண்டியன் அவைக்களம் புகுந்து, தனது காதலனைக் கொன்றது அறமன்று என்று வாதம் பரிந்தபோது, "கள்வனைக் கோறல் கடுங் கோலன்று" என்று அவள் கூற்றுக்கு மறுப்புரை பகர்ந்த மன்னன், பின்னர் தன் தவறுதலுணர்ந்ததும் "யானே அரசன்; யானே கள்வன்" என்று அரியாசனத்தினின்றுங் கீழே சாய்ந்து தனது நுண்ணுயிர் நீத்தான். ஒரு மன்னன் தன் பிழையுணர்ந்ததும் மனச் சாவினால் தாக்குண்டு மாண்டான்! அவன் செங்கோல் மாட்சியென்னே! என்னே! அவன் முன்னோர்கள் அறத்திறன் என்னே! என்னே! இளைஞர்களே! உங்கள் முன்னோர்கள் ஆட்சியின் நீதியை உன்னுங்கள்; உன்னுங்கள்.

பின்னே இவ்வரலாறு களியாட்டின் பொருட்டு நாடகக்காரர்களால் குடல் பிடுங்கிய கொலைக் கதையாகத் திரிக்கப்பட்டது. இடைக்காலத்தில் சமணர்களும் வழக்க வொழுக்கங்களும் பாழ்படுத்தப் பட்டதை நினைக்குங்கால் கண்ணீர் பெருகுகிறது. இப் பாழ்களைப் பொருளாகக் கொண்டுஎல்லாநாட்டையே குலைக்கிறார்.

ஈண்டு வேறொன்று உங்களிற் சிலரது நினைவில் உறலாம். மனச்சான்றால் ஒரு மன்னனை மாள்வித்த அறம் வளர்ந்த ஒரு நாட்டில் சமணர்களைக் கழுவேற்றிய மறம் வளர்ந்ததென்னை என்று சிலர் கருதலாம். சமணர்களைக் கழுவேற்றிய வரலாற்றிற்குப் போதிய அகச்சான்றுதல் புறச்சான்றுதல் உண்டா என்பது முதலாவது நிந்திக்கத்தக்கது. தச்சானறுகள் நிலைக்கும் வரை சமணரைக் கழுவேற்றிய வரலாற்றை யான் கொள்ளேன்; கொள்ளேன். தேவாரத்தில் போதிய அகச்சான்றில்லை. அந்நாளில் பாண்டி நாடு போந்த வெளி நாட்டார் சிலர் எழுதிய குறிப்புக்களிலும் அவ்வரலாறு காணேம். திருஞான சம்பந்தருக்குப் பின்னே பன்னூறு ஆண்டு கடந்து எழுதப் பெற்ற சில புராணங்களில் சமணரைக் கழுவேற்றிய கதைகள் சொல்லப்படுகின்றன. அக்கதைகளும் ஒருமைப்பாடுடையனவாகவில்லை. ஒரு புராணக் கதைக்கு மற்றொரு புராணக் கதை முரண்பட்டு நிற்கிறது. இப் புராணக் கூற்றுக்களைச் சரித்திர உலகம் ஏற்குங் கொல்! சரித்திர உலகம் ஏற்றுக் கொள்ளும் முறையில்லாமே சான்றுகளிருத்தல் வேண்டும்!

இப்பொழுது "ஞான சூரியன்" என்னும் ஒரு நூல் தமிழ் நாட்டில் உலவுகிறது. அந்நூற்கண் எடுத்துக் காட்டப்பட்ட திருஞான சம்பந்தர் நிருப்பாக்களில் ஒரு மாற்றஞ் செய்யப்பட்டிருக்கிறது. "ஐந்தனுளர் புரியும் அருமறை- சிந்தை செய்யா அருகர் நிர்களை - சித்தவாறு செயத் திருவுள்ளமே" என்பது தேவாரம். இதன் கண் போதுள்ள "திறம்" என்னுஞ் சொல் "ஞான சூரிய" னில் 'நிரம்' என்னுஞ் சொல்லாக மாற்றப் பட்டிருக்கிறது. இம்மாற்றங்கண்டு அந்நூலாசிரியரை நேரே சண்டு கடியேன் கோட்டபோது, அவர் பெரிதும் வருந்திப் பத்திரிகைக்கு நீள் கடிதம் அனுப்பினார். அது வருமாறு:—

அன்புடைய சகோதரர்கட்கு இக்கடிதம் வழியாய் அறிவிப்பது யாதெனில்:- "ஞான சூரியன்" என்ற புத்தகத்தில் பக்கம் 95-ல சுவாமி ஜயிக்க திருஞான சம்பந்த சுவாமியின் ஆலவாய்ப் பதிகத்தில் [illegible] புரியு மருமறை [illegible] "சிந்தை செய்யா [illegible] திறமலை" என்ற தொடர்ப்பு "சிந்தை செய்யா வருகர் [illegible]" என்று மாறி விருக்கிறது. அச்சுப் பிழையாக உள்ளதை ஞான சூரியனை வாங்கும் ஜனங்கள் 'திறங்களை' என்று இருத்தலை 'திறங்களை' என்று திருத்தி வாசிக்கக்கேட்டுக் கொள்ளுகிறேன். நான் எழுதின "தப்ராஹ்மணீஜ்யானதம்" என்ற மலையான புத்தகத்தில் 'திறங்களை' யென்றே எழுதியிருக்கிறேன். மேற்படி ஞான சூரியன் புத்தகத்தில் 80 பக்கம் அச்சிடும் வரைக்கும் என் கண் பார்வையில் நடந்தது. மிகுதி அச்சியற்ற திரு. வி. க. ஷண்முகம் செட்டியார் அவர்களிடம் ஒப்புவித்தேன். ஆனால் இப்புத்தகத்தில் நிகழ்ந்த பிழை அச்சுப் பிழையாயிருத்தல் வேண்டும். அல்லது என் புத்தகத்தைக் காப்பி செய்தவர்களின் பிழையாயிருத்தல் வேண்டும். அதுவன்றி இப்புத்தகத்தில் பல அச்சுப் பிழைகள் வடமொழிப் பாட்டுகளிலும் தமிழ் நடைகளிலும் இருப்பதால், இனி திருத்தி வெளியிட்டால் லோகோபகாரமாயிருக்குமென்று நம்புகிறேன். (ஓம்) சுவாமி வொனந்த சாஸ்வதி.

இதை 6-4-28-ல் கூடிய பௌத்தர் மகாநாட்டிலும் அடியேன் விளக்கமாகச் குறிப்பிட்டேன். (திரு—சமயக் கொள்கை. மணிமேகலையில் சமயக் கணக்கர் தந்திரம் உரைத்த காதை எனவருஉந் தலைப்பை நோக்குக.)

அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந்தொல்லை விளைக்கின்றன. அச்சில்லாத பழைய காலமாயின் ஞான சூரியனிலுள்ள மாறுபாடு யாண்டாயினும் ஒரு மூலையில் எட்டில் உறங்கிக் கொண்டிருக்கும்.

பண்டைப் பாண்டி மன்னர் எச்சமயத்துக்கும் இடையூறு செய்தாராகத் தெரியவில்லை. சமயப் பொறை தவறாமலிருந்தது. அம்மன்னர் காலத்தில் பல சமயத்தார் தத்தஞ் சமயம் வளர்க்க இடம் பெற்றனர். சங்கப் புலவருள் பல சமயத்தாரிருந்தனர். சமணர், புத்தர், கிறிஸ்துவர் முதலிய பல சமயத்தார் பாண்டி நாடு போந்து தத்தங் கொள்கையைப் பரப்பி வந்தனர். எல்லா வழியிலுஞ் செவ்வோவாட்சி செலுத்திய பாண்டி மன்னர் வழி வழி வந்த ஒருவர் சமய [illegible] பேலீட்டான் உயிர்களைக் கழுவேற்றுங் கொலைத்தொழில் மேற்கொண்டிருப்பரோ? கழுவேற்றிய கதையைச் சரித்திர முறையில் கொள்வது பாண்டி மன்னரை இழிவுபடுத்துவதாகும்.

பழைய பாண்டிப் பெருநாட்டில் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதிப் புன்மையில்லை. தீண்டாமை அந்நாளில் கிடையாது. சாதியென்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லன்று. அந்நாளில் பெண்மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள்; கல்வியாளர்களாயிருந்தார்கள்; செங்கோலும் ஓச்சினார்கள். விரிவு என்னுஞ் எழுதப்பட்ட "பெண்ணின்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(7-ம் பக்கத்தின் தொடர்பு)

வீரத்துக்கு இலக்கியமாகப் பண்டை நாளில் மார்க்கண்டர், பிரகலாதன், சோக்ரதர், ஹரிஸ்து, திருவள்ளுவர் முதலியோர் விளங்கினர். இற்றை நாளில் மகாத்மா காந்தி அவ்வீரத்தைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இளைஞர்களிடை இப் பொறுமை வீரம் பொலிதல் வேண்டுமென்பது எனது வேணவா. இவ் வீரம் பெற இளைஞர்கள் முயல்வார்களாக. இதற்கு கல்லூரி தேவை. ஆதலால் உடலை கல்வழியில் ஓம்புக.

கல்வி.

"இளமையிற் கல்" என்பது ஔவையார் அருமொழி. இளமை கல்விக் குரியது. இளமையைக் கல்விக்குப் பயன்படுத்தலே பொருத்தம். அதனைப் பிறவற்றிற்குப் பயன்படுத்தல் பொருத்தமன்று. வயிற்றுப் பிழைப்பு நாட்டமே பொருந்த மற்ற ஒன்றில் மக்களைப் புகுத்துகிறது. "வயிற்றுப்பிழைப்புக்கொக் கல்வி பயில்வோர் போக மற்றையோர் ஏன் கல்வி பயில் வேண்டும்" என்னும் எண்ணம் இளமையைப் பாழ்படுத்துகிறது; பலரைக் கல்வி யறிவிலாத கயவராக்குகிறது. இவ் வெண்ணம் நாட்டை விட்டகலல் வேண்டும். இக் குறைபாட்டைப் போக்கலே கட்டாயப்படிப்பு முறை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

சட்டம் வந்த பின்னைக் கட்டாயப் படிப்பில் தலையிடுவது அறிவுடைமையாகாது. சட்டமில்லா நாளில் கட்டாயக் கல்விபெற முயல்வதே அறிவுடைமை. நாடார் சகோதரர்கள் இம் முயற்சியில் தலைப்படுவரேல் மிக எளிதில் வெற்றி பெறுவார்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இம்முயற்சியில் விரைந்து தலைப்படுமாறு சகோதரர்களை வேண்டுகிறேன். "கல்லாதார் வாழ்வாதார் நாடார்களிலில்லை" என்று உலகங் கருதுமாறு நீங்கள் உழைப்பீர்களென்று உறுதியாக நம்புகிறேன். உங்கள் முயற்சியால் விளையும் பயன் காணும் மற்றவர்களும் உங்கள் அடிச்சுவட்டைப்பற்றி நடக்க எழுவார்கள். நாளடைவில் நாடே கல்விநிலம்பெறும். கல்வி அறிவால் நாட்டிலுள்ள பலதிறக் குறைபாடுகள் ஒளியும். குறைபாட்டிற்குக் காரணம் போதிய கல்வி யறிவின்மையன்றி வேறெங்கே?

அறிவு விளக்கத்துக்கும் ஒழுக்கத்துக்கும் இன்ன பிறவற்றிற்கும் பொதுவாகவுள்ள கல்வியுடன், பின்னை வாழ்விற்கென, வேறு பல கல்வித் துறைகளுள், தத்தம் இயல்புக்கியைந்த ஏதாயினும் ஒன்றைக் கணித்துக்கொண்டு, அதில் சிறப்பு ஞானம் பெற இளைஞர்கள் முயல்வார்களாக. இப்பொதுச் சிறப்புக் கல்வி வாழ்விற்குப் பெருந்துணை செய்யும், ஏடெடுத்துப் படித்தல் மட்டுங் கல்வியாகாது. தொழிற் பயிற்சியும் கல்வியின் பாற்பட்டதே.

இந்நாளில் கல்வி யென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை கெட்டுருச் செய்துபரீட்சையில் தேறிப் பட்டம் பெற்று ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லா தொழிலிறது. இது கல்வி யாகுமா?

"ஆங்கிலம் பயிறலே கல்விக் கழகு" என்று சிலர் கருதுகிறார். அப்பயிற்சியுடையாரே கற்றவரென்றுஞ் சிலர் சொல்கிறார். ஆங்கிலம் பயிறலாகாது என்று யான் ஒரு போதுஞ் சொல்வேன். உலக மொழியாகப் பரவிவருவதும் அம் மொழிப் பயிற்சி இளைஞர்க் கிருத்தல் வேண்டும் என்றுஞ் சொல்வேன். ஆனால் "ஆங்கிலத்திலேயே கல்வியறிவுண்டு; அதுவே வாழ்விற்கு உய்வு நெறி காட்டுவது" என்பனபோன்ற கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளுந் தகைய வல்ல.

ஆங்கிலமென்பது ஒரு நாட்டு மொழி. அம்மொழிப் பயிற்சியிலேயே கல்வி யறிவுண்டு என்று கருதுவது அறியாமை. கல்வியறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம். கல்வி யறிவிற்கு 'இம் மொழி' 'அம்மொழி' என்னுங் கட்டுப்பாடில்லை. ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாட்டிலுள்ளோர் தத்தம் தாய் மொழி விடுத்து ஆங்கிலம் படித்தா கல்வி அறிவு பெறுகிறார்? புதுவைக்கணுள்ள தமிழ் மக்கள் ஆங்கிலங் கற்று மேல் நாட்டுத் தத்துவங்களை உணர்கிறார்கள்? திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பன், சேக்கிழார் முதலியோர் ஆங்கிலம் பயின்று உலகம் போற்றுங் காவியங்களை எழுதினர்? ஆகவே "ஒரு நாட்டு மொழியே கல்விக் குடையது" என்று கொள்ள இயற்கையில் எக்கியநியமில்லை. அவரவர் தத்தம் தாய் மொழியிலேயே கல்வி பெறலாம்.

நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும், நேரமும், வாய்ப்பு மிருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்.

தமிழில் "அக்கலை யில்லையே; இக்கலை யில்லையே; சிறப்பாக "ஸைன்ஸ்" என்னும் அறிவுக்கலை யில்லையே" என்று சிலர் கூக்குரலிடுகிறார். 'ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக் கலைகளும் பிறந்தன' என்று அச்சகோதரர்கள் சிந்திப்பார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர்கள் தங்கள் மொழியில் பல கலைகளைப் பெயர்த் தெழுதியிருக்கிறார்கள். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகள் ஏல்லாவற்றையும் ஆங்கிலேயர்கள் மட்டுமா கண்டார்கள்? இல்லை; இல்லை. சில பிரன்சுக்காரர்களால் காணப்பட்டன. சில ஜெர்மானியரால் காணப்பட்டன. மற்றுஞ் சில வெவ்வேறு நாட்டினரால் காணப்பட்டன. ஆங்கிலேயருஞ் சில கண்டுள்ளார். நமது டாக்டர் போல் சில கண்டு வருகிறார். உலகில் பல விடங்களில் பல நுட்பங்கள் காணப்படல் இயல்பு. அவைகளைக் காணும் அறிஞரை அவ்வந்நாட்டார் அவ்வம் மொழியினர் என்று கருதல் கூடாது. ஆங்காங்கே அறிஞர் கண்ட உண்மைகள் மன்பதைக் குரியன. அவைகளை நாடு மொழி என்னுஞ் சிறைகளிலிடுவதினுஞ் சிறந்த மடமை பிறிதொன்றில்லை. அவ்வுண்மைகளை அவரவர் தத்தம் மொழியில் பெயர்த்து அறிவு பெறல் வேண்டும். அவ்வழியிலேயே உலகம் இயங்கி வருகிறது.

அவ்வம் மொழிக்கே சிறப்பாக விளங்கும் நூல்களுமுண்டு. அவைகளை மொழி பெயர்ப்பதால் பயன் விளையாது அவைகளே காவியங்களென்பன. காவியங்கள் எவ்வெம்மொழியில் தோன்றினவோ அவ்வம்மொழியாளர்க்கே அவைகளின் கலந்த இன்பந்தோன்றும். அவ்வின்பம் மொழி பெயர்ப்பில் உறுதலரிது. இக்காவியங்கள் போக மற்றக் கலைகளெல்லாம் உலகிலுள்ள அனைவர்க்கும் பொது உடைமை.

நமது தாய் மொழியில் உலகிலுள்ள பல திறக் கலைகளைப் பெயர்த் தெழுதி நாம் பயின்று வரலாம். இக்கோக்குடனே தமிழ்ப்பல்கலைக் கழகங் காணப்படும் முயற்சி நாட்டில் அரும்பி வருகிறது. இவ்வேளையில் நமது தாய் மொழியில் எல்லாக் கலைகளையுங்கொணர அறிஞர்கள் முயல்வார்களாக. இம்முயற்சி தாய் மொழியின் மாட்டுக் கொள்ளும் அன்பைப் பொறத்து நிற்கிறது. இளைஞர்களாகிய நீங்கள் தாய் மொழியிலேயே உறுதி கொள்வீர்களானால், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாடு நாளை பெற்றிடும். இளைஞர்களே! இம்முயற்சியில் 'தலைப்படுங்கள்' என்று எவரேனும் உங்கட்குச் சொல்லவும் வேண்டுமோ? அஃது உங்கள் மடமை என்று முழங்குகிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறத்து நிற்கிறது. நமது தாய் மொழியின் தொன்மை, சிறப்பு முதலியவற்றை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெரும் பெருங் காவியங்களை அணிந்தவள் நந்தமிழன்னை. அவ்வளமுடைய தமிழில் எக்கலையை நுழைத்தல் முடியாது?

நம்மவர்க்குத் தாய் மொழிப் பற்று குறைவு என்பது வெளிப்படை. தாய் மொழிப் பற்றில்லாவிடத்தில் முன்னேற்ற முயற்சி எங்ஙனம் உருக்கொள்ளும்? முன்னேற்றத்துக்கு உயிர் தாய் மொழியன்றோ? அதன் மீது கவலை செலுத்தாதிருப்பின், நாட்டின் கவலை எவ்வாறு நீங்கும்? அயர்லாந்தின் விடுதலைக்கு அந்நாட்டுத் தலைவர்கள் எவ்வெத் துறையிலோ முயன்று முயன்று வெற்றி பெறாது, இறுதியில் நாட்டு மொழியில் காதல்கொண்டு, அதனை யோம்பி, வெற்றிபெற்றது உலகமறிந்த தொன்று. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டது. அம்மொழியை வஞ்சிப்பது பிறந்த நாட்டை வஞ்சிப்பதாகும்.

நமது நாட்டில் தலைவர்கள், கற்றவர்கள் என்று சொல்லிக் கொள்வோருள் எத்தனை பேர் தாயை வஞ்சிக்கிறார் என்பதை இளைஞர்களே! கூர்ந்து உன்னித் தாய் மொழியின் இன்றியமையாமையை உணருங்கள்; உணர்ந்து உணர்ந்து தாய் மொழியின் ஆக்கத்துக்குப் பாடு படுங்கள். உங்கட்கு நல்லா நலனும் உண்டாகும்.

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது "ஸைன்ஸ்" என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்புமுறை, பூத பௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலிய வற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வாழ்விற்கு வேண்டுமா? வேண்டாமா? இந்நாளில் இவைகளைப் பற்றியபொது அறிவாதல் பெற்றே தீரல்வேண்டும். இவ்வறிவுக் குறைவால் நாடு மிக இழிந்த நிலையுற்றிருக்கிறது. இவ்விழி நிலை போக்க வேண்டுவது உங்கள் கடமை.

புற உலக ஆராய்ச்சிக்கு "ஸைன்ஸ்" கொழுக்கொம்புபோன்றது. நம் முன்னோர்கள் கண்ட பல உண்மைகள் "ஸைன்ஸ்" அரணின்றி இந்நாளில் உறுதி பெறல் அரிது. இக்கால உலகத்தோடு உறவு கொள்ளுதற்கும் "ஸைன்ஸ்" தேவை. ஆதலின் "ஸைன்ஸ்" என்னும் அறிவுக் கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

வாழ்விற்குரிய இன்பத் துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாவது என்றுங்கூறலாம். வாலிப நாடார்களே! நாம் தமிழர்கள். நாம் பாட்டு இன்பத்தை நுகர வேண்டுமேல் நாம் யாண்டுச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களிடையன்றோ? இப்பொழுது தமிழ் இலக்கியங்கள் தமிழிளைஞர்களால் பெரிதும் படிக்கப்படுகின்றனவா? இல்லையே. ஏனவே இளைஞர்கள் வாழ்வில் ஒரு பெரும் இன்பத்தை இழப்பவராகிறார்கள்.

தமிழில் பாட்டுங் காவியங்களில்லையோ? பலப் பல இருக்கின்றன. இயற்கை ஒலியம் பத்துப் பாட்டு; இயற்கை இன்பக் கலம் கனித்தொகை; இயற்கை வாழ் வில்லம் திருக்குறள்; இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும்; இயற்கைத் தவம் சிந்தாமணி; இயற்கைப் பரிணமம் கம்பராமாயணம்; இயற்கை அன்பு பெரிய புராணம்; இயற்கை இறையுறையுள் தேவாரதிருவாசக திருவாய் மொழிகள். இத்தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச்சொல்லால் சொல்ல இயலாது. அஃது அநுபவ நிகழ்ச்சியில் உறுவது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்பநாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்; தமிழ் இன்பத்தினுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்" என வருஉம் தமிழ்ப் பாரதியை நோக்குங்கள்; தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்.

சமயம்.

சமயம் மக்களை விலங்கினின்றும் பிரிப்பது. சமயம் மக்கட்குக் கடவுள் உணர்வூட்டி, அவர்களைக் கடவுள் நெறியில் நிறுத்துவது. சமயம் மக்கள்பாலுள்ள அழுக்காறு, அவா, வெகுளிமுதலிய விலங்கு நீர்மைகளைச் செகுத்து, அவ்விடத்தில் அன்பு, அருள், அறம் முதலிய கடவுள் நீர்மைகளைப் பெய்து, அம்மக்கள் கடவுள் நிலைபெறத் துணைபுரிவது. இப் பேறு பெறுவதே மக்கள் வாழ்வின் நோக்கம். பிறந்து வளர்ந்து மாண்டு போவதா வாழ்வின் நோக்கம்? அன்று; அன்று. மாண்ட பின்னரும் நமக்கு வாழ்வுண்டு. முன்னே இவ்வாழ்வுண்மை ஆன்றோர் மொழிகளில் நம்பிக்கையில் நின்றிருந்தது. இப்பொழுது அஃது ஏதுக்களால் உறுதிபெற்று வருகிறது.

இவ்வுடல் நீத்தல் என்னும் இறப்பு நிகழும் போது, இவ்வுடலினின்றும் பிரிந்து செல்லும் அணுவுடலைப் படம்பிடிக்கும் ஒரு புதுமை இப்பொழுது மேல் நாட்டில்காணப்பட்டு வருகிறது. இன்னும் அம்முயற்சி மேன்மேலும் அந்நாட்டுத் தத்துவ உலகில் வளர்ந்து வரும். நம்முன்னோர்கள் அகமுகத்தில் கண்ட பல உண்மைகள் மேல் நாட்டுப் புறமுக ஆராய்ச்சியில் உறுதிப்படுங் காலம் சேய்மையிலில்லை. இவ்வுடல் நீத்த உயிர்களுடன் உரையாடுவது அத்துறையில் பயிலுவோர்க்கு மிக எளிதாய் விட்டது.

இவ்வுடல் நீத்த பின்னை ஒருவன் பெறும் வாழ்வு பெரிதும் இவ்வுலகில் அவன் நடாத்தும் வாழ்வையே பொறத்து நிற்கிறது. இவ்வுண்மை யுணராது 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று அலங்கோல வாழ்வு நடாத்துவது அறிவுடைமையா

(இதன் தொடர்பு [illegible])

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

சாதி தலம் பிறப்பிறப்பும் பற்றி முத்தி
அடைவுறாத் தன்மை நாம
மேது மின்றி மெய்ப்பொருளாத மெல்லிட
த்துய் பிரிவை நின்றியக்கந் தெரியாமு
சோர்வை மாத்து வெளியைனதவிழ
நிலையான துரிய வாழ்வைத்
தீதில் பரமம் பெறுனைத் திருவருளே
நிலைவரக் சீர்தரை செய்வாம்.

நாடார்குலமித்திரன்

லீபவஸ்ரீ ஆடி மீ அ உ

நாடார் மகாநாடும், முதன் மந்திரியும்.

அருப்புக்கோட்டையில் நாடார்கள் 12-வது மகாநாட்டைத் திறந்து வைத்த நமது மாகாண முதன் மந்திரி கனம். டாக்டர் சுப்பராயன் அவர்களுடைய சொற்பொழிவை சென்ற வாரத்தில் பிரசுரித்திருக்கிறோம். கனம். மந்திரியை அருப்புக்கோட்டை மகாநாட்டார் வெகு மரியாதையுடனும், அன்புடனும் அழைத்து வரவேற்க வந்த காட்சியானது எல்லோருள்ளத்திலும் எப்போதுமிருக்கவே கூடும். நாடார்கள் அழைப்பினால் இக்காட்டுப் புறங்களையும் நாட்டு ஜனங்களின் நடவடிக்கைகளையும் கனம். மந்திரியவர்கள் பார்த்துக்கொள்ள நல்ல சந்தர்ப்பமாயிருந்திருக்கவுங் கூடும். ஒரு மாகாண முதன் மந்திரி வருகை அருப்புக்கோட்டை நகர்க்கே ஒரு விசேஷமென்று கருதலாம். "கெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால்வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமா"மென்று நமது கிழவி பாட்டுக்கேற்ப நாடார்களுடைய அழைப்பினால் முதன் மந்திரியவர்களை அனேகர் கண்டு தெரிசிக்கவும், சில பொது ஸ்தாபனங்களை கனம். மந்திரியவர்கள் பார்வையிடவும், கல்விக் கழகங்களை ஆரம்பஞ் செய்யவும் நேர்ந்தானது சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும். எல்லோருக்கும் ஏற்ற இச்சந்தர்ப்பத்தை இணைத்த நாடார் மகாநாட்டுக்கு நாமும் நன்றி செலுத்துகின்றோம்.

தேசிய முன்னேற்றத்துக்கு ஜாதிய மகாநாடுகள் பெருந்தடையாகுமென்று சொல்லும் போலித் தேசிய வாதிகளுக்குத் தக்க பதிலாக, 'ஜாதிய மகாநாடுகள்' எனும் தலைப்பின் கீழ் கனம். மந்திரியவர்கள் குறிப்பிட்டிருப்பது யாவரும் கூர்ந்து கவனிக்கத்தக்கது. சமூக மேற்றுமையைப்பற்றிச் சொல்லியிருக்கும் புத்திமதிகளும் போற்றத்தக்கன. தேசிய சிக்கனத்தில் கதரைப்பற்றிப் பொறித்த பொன்னுரைகளை மிகவும் பாராட்டுகின்றோம்.

தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்த போதும், நாடார் குலத்தலைவர்களை நெருங்கிப் பழகினபோதும் சில இந்துக்கோயிலுக்குள் நாடார்கள் போகாதபடி தடுக்கப்பட்டிருப்பதுபற்றி வருத்தப்பட்டிருக்கின்றார். சுத்த ரத்தமுள்ள எந்த இந்தியனுக்கும் கோயில் கொடுமையைக் கேட்டால் மனம் கொதிக்குமென்பது திண்ணமையே.

இந்து மதமானது கடவுளைத் தொழும் விஷயத்தில் இதுவரையில் போக்கியமான மதமென்று எண்ணி மிருந்ததாகவும், தஞ்சை ஜில்லாவில் அவருடைய நம்பிக்கை நேர்விரோதமாக விருப்பதாகவும், அதைத் தம்மாலான மட்டும் நீக்க முடியுமென்றுங் கூறியுள்ளார். ஆனால் நாடார்கள் முன்னேற்றத்தில் நியாயத்திற்குஞ் சட்டத்திற்குங் கட்டுப்பட்டு நடக்குமாறு எச்சரித்திருக்கின்றார். அது விஷயத்தில் நாடார்கள் வெகு எச்சரிக்கையுடன் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்களென்பது உலகமறிந்த விஷயம். ஆனால் நாடார்கள் பொறுமைக்கும் ஒரு அளவிருக்குமென்பதை பிற வகுப்பார் இன்னும் சரியாக உணரவில்லை. சட்டப்படி நடக்க எச்சரிக்கை செய்த கனம். மந்திரி சட்டப்படி நாடார்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளனைத்தையும் சிறிதும் தயங்காமல் உடனே கொடுத்துவிட வேண்டுகின்றோம். மேலும் நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக விருக்கும் தீண்டாமை, பார்க்காமை முதலிய தீய எண்ணங்களை சட்ட மூலம் தீர்க்க கனம். மந்திரி தமக்கேற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தை விட்டுவிடாமல் முயற்சிக்கவேண்டும். நமது நாட்டில் மக்கள் இதபசாதனங்களை அடையலாமென்று சரியாகவோ தப்பாகவோ எண்ணி நம் நாட்டு அரசர்களாலும் தனவந்தர்களாலும் கட்டப்பட்ட ஆலயங்களில் கரையான் புற்றில் நாகப்பாம்பு புகுந்த மாதிரி ஒரு வகுப்பார் புகுந்து கொண்டு கோயிலுக்குடையவர்களை யெல்லாம் அகக்கண் குருடர்களாக்கி கோயிலுக்கு வெளியே நிற்கும்படி செய்து விட்டார்கள் கோயில்களையும் தாசி இல்லங்களாகவும், காப்பிக் கிளப்புகளாகவும், கக்கூசுகளாகவும் செய்து விட்டார்கள். சில, திருடர் வசிக்கும் குகைகளாகவும், சோம்பேறிகள் படுக்கும் சாவடிகளாகவும் போய்விட்டன. இவைகளை செவ்வனே சீர்தூக்கிப் பார்த்து மக்கள் சமூக வாழ்க்கைக்குப் பொருத்தமில்லாமற்காணும் ஆலயங்களையும், ஆலயங்களின் நடவடிக்கைகளையும் சரியானபடி திருத்த வேண்டும். அல்லது அவ்வாலயங்களை இடித்து எடுத்துவிட வேண்டும். மாஜி மந்திரி கனம். ரெங்கநாதமுதலியார் இந்துமத பரிபாலன சட்டத்திலுள்ள குறைகளைச் சரியானபடி தீர்த்து வைப்பேனென்று மார்தட்டினார். அவர் அதைச் செய்யமுடியாமல் அவர் ஸ்தானம் அற்ப ஆயுளாக முடிந்து விட்டது. அவர் போகிறபோது சுய புத்தியில்லாமல் தஞ்சை ஜில்லா நாடார்கள் மீது ஒரு வெடிகுண்டைப் போட்டு விட்டுப் போனார். ஆகையால் கனம். டாக்டர். சுப்பராயன் தமது சகபாடி செய்த தீங்கை மாற்றி நியாயத்தை நிலை நாட்டி நாடார்களுக்குரிய உரிமைகளைச் சிறிதும் தயங்காமற் செய்வாரென்று நம்புகின்றோம்.

6-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

சாதி.

நமது நாட்டில் பண்டைக் காலத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதியில்லை. அவ்வேற்றுமை இடைக் காலத்தில் நாட்டிடைப் புகுந்தது. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் இயற்கையுடன் மாறுபட்டு நிற்பதாகும். சிறப்பில் உயர்வு தாழ்வு கோர்தல் இயல்பு. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதி வேற்றுமை நமதுநாட்டைப் பெருஞ் சனியாய்ப் பீடித்து நிற்கிறது.

நமது நாட்டில் அவ்வப்போது தோன்றிய பெரியோர்கள் சாதியைக் கடிந்திருக்கிறார்கள். திருவள்ளுவர், நால்வர், ஆழ்வார் முதலியோர் சாதிக் கொடுமையை மறுத்துரைத்த செம்மொழிகள் பல. "பிறப் பொக்கும் எல்லாஉயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" "சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்—கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்" "சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாண்டானை":—இவ்வருண மொழிகளை நோக்குக.

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதிக்கொடுமை தாண்டவம் புரிந்த வேளையில், அக்கொடுமை களைய அக்கால நிலைக்கேற்றவண்ணஞ் சீர்திருத்தஞ் செய்ய எழுந்த தமிழ் நூல் ஒன்றுண்டு. அதுவே பெரிய புராணம் என்பது. அது பதினெண் புராணங்களுள் சேர்ந்ததன்று. அந்நூலை ஆராயாமலே புராணம் என்னுஞ் சொல்லைக் கண்டோ கேட்டோ அதையும் புராணக் குப்பையில் கலக்கிறார் சிலர். சாதிக் கொடுமை மிகுந்திருந்த வேளையில் எவ்வளவில் எம்முறையில் அக்கொடுமை போக்கக் காலதேச வர்த்தமானம் இடந்தருமோ அவ்வளவில் அம்முறையில் பெரிய புராணஞ் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்தது. அந்நூலெழுந்த காலநிலை கருதியே அந்நூலையாய்தல் வேண்டும்.

பெரிய புராணத்தில் கலப்பு மணம் உடனுண்ணல், பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனர் குருவாகக் கோடல், எச்சிலையில்லின்றுமெவ்வேடங்கொண்டும்ஆண்டவனை வழிபடல் முதலிய பல சீர்திருத்தங்கள் நிலவுகின்றன. இவைகள் இக்காலத்துக்கு வேண்டற்பாலன வென்றுயான் சொல்லவேண்டுவதில்லை. அச்சீர்திருத்த முறைகளைக்கொண்டு இப்பொழுதும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யலாம்.

"சாதி வேற்றுமை தொலைதல் வேண்டும்" என்னும் பேச்சும் எழுத்தும் யாண்டும் பெருக்கெடுத் தோடுகின்றன. ஆனால் செயலிலோ சாதி வேற்றுமையோடு சாதிப்பூசலும் வளர்ந்துவருகிறது. ஜாதிப் பூசலால் நாட்டுக்கு நலன் உண்டாதீமையுண்டா என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. சாதி வேற்றுமையுள்ளமட்டும் ஜாதிப்பூசல்களன்றுகொண்டே யிருக்கும். ஜாதி வேற்றுமை முறவே ஒழிந்தாலன்றி நாட்டுக்கு நலன் விளைதல் அரிது. ஜாதிக்குள் ஜாதியாக வேர்விட்டுள்ள வேற்றுமைகள் எளிதில் ஒழியுங்கொல்! என் செய்வது?

இளைஞர்கள் மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம். நமது நாட்டின் விடுதலை சாதி வேற்றுமை யழிவில் இருப்பதை இளைஞர் உலகம் நன்கு அறிந்திருக்கிறது. அவ்வுலகில் தேச பக்தி பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே மறைந்துபோகும். தேசபக்தி பூட்டத்தக்க இயக்கங்களிலேயே இளைஞர்கள் சேர்தல்வேண்டும். பிணைவையும் பிரிவையும் காழ்ப்பையும் உண்டுபண்ணும் நச்சியக்கங்களில் இளைஞர்கள் சேர்தலாகாது. இவ்வுறுதி இளைஞர்கள் உளத்தில் பசுமரத்தாணிபோல் பதிதல் வேண்டும்.

"நாட்டில் சாதியுள்ள மட்டுஞ் சாதி இயக்கங்கள் தோன்றுதல் இயல்பு" என்று சிலர் வாதிக்கிறார். சாதி இயக்கந்தோன்றுதிருப்பது நலன். தோன்றினும் அது சாதிப் பூசலுக்கு நிலைக்களனாயிருத்தல் கூடாது. முள்ளை முள்ளால் வாங்குதல் போல் சாதியைச் சாதியால் தொலைக்கலாம். சாதி இயக்கங்களால் சாதிகள் வலுப்படலாகாதென்பது எனது உள்ளக்கிடக்கை.

இளைஞர்களே! பிறப்பில் உயர்வு தாழ்வு குறிக்குஞ் சாதிவேற்றுமையைத் தொலைக்க உங்கள் வாழ்வில் கொள்ளத்தக்க சில முறைகளை கண்டுப் பொறிக்கிறேன். க. பிறப்பில் உயர்வு தாழ்வு எக்காரணம் பற்றியுங் கருதாதேயுங்கள். உ. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி எவரையுங் குருவாகக் கொள்ளாதேயுங்கள்; அக்குருவுடன் எவர்க்கும் வந்தனை வழிபாடு செய்யாதேயுங்கள். ங. தீண்டாமையை முற்றும் விலக்குங்கள். ச. பிறப்பில் சாதி வேற்றுமை குறிக்கும் எவ்வினைகளிலுந் தலைப்படாதேயுங்கள்; எவ்விடத்துக்கும்வகாதேயுங்கள். இ. கலப்பு மணத்தில் கருத்திருத்தி அதை வினையில் ஆற்றுங்கள். கலப்பு மணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதிவேற்றுமை தானே சாய்ந்துபடும். இன்னோரன்ன பல சீர்திருத்த முறைகளை நீங்கள் வாழ்வில் கடைப்பிடித்தொழுக முயன்றால் சாதிப் பேய் நாட்டை விடுத்தோடுதல் ஒருதலை.

இளைஞர்கள் ஓய்வு காலங்களில் வெளி நாடுகளுக்குச் சென்று திரும்புவரேல், அவர்கட்குச் சாதி வேற்றுமையில் வெறுப்புத் தோன்றும். பல நாட்டார் கூட்டுறவு சாதி யழிவுக்கு ஓர் ஏதுவாகும்.

பெண்ணுலகு.

உலகத் தோற்றத்துக்கும் ஆக்கத்துக்கும் பிறவற்றிற்கும் முதலா யிருப்பவர்கள் பெண் மக்கள். பெண்ணுலகின் பெண்மையும் தாய்மையும் இறைமையுமே உலகை நடாத்திவருகின்றன. அப்பெண்ணுலகின் நிலைகொண்டே, ஒரு நாட்டின் நாகரீகத்தை அளந்துணரல் வேண்டும்.

நமது நாட்டின் பெருமையை அடிக்கடி நாம் பேசி மகிழ்வடைகிறோம். அப்பெருமையை நமது நாடு எப்பொழுது பெற்றிருந்தது? பெண் உரிமை பெற்றிருந்த காலத்திலன்றோ? பெண் உரிமையிழந்த நாள் தொட்டு நமது நாடு அடிமைக் குழியில் விழுந்து வருந்துகிறது. தாயை அடிமைப்படுத்திய பாவம் நாட்டைச் சூழ்ந்து நிற்கிறது.

கடவுளை அம்மையப்பராகப் போற்றிய இந்நாட்டில் பெண்ணடிமை எங்ஙனே நுழைந்துவிட்டது? வேதகாலத்தில் பெண் மக்கள் உரிமைபெற்றிருந்தார்கள்; சங்க காலத்தில் அம் மக்கள் உரிமை யின்பம் நுகர்ந்தார்கள். கம்பன் காலம் வரை பெண்ணுரிமைக்குப் பெருங்கேடு நிகழவில்லை. தமிழ் நாட்டில் பெண்ணுரிமைக்கு ஊறு நேர்ந்த காலம் பின்னைய காலமேயாகும்.

பெண் மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உன்ன உன்ன

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உள்ளம் உருகுகிறது. அவைகளை விரித்தவர்களின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? இரும்பெனஇயம்புவதா?

பெண் கல்வி மறுப்பு, இளமை மணம், நாயகனைப் பெண் தானே தெரிந்தெடுக்கும் முறை அழிவு, இளங்கைம்பெண்ணையரையும் மொட்டையடித்துச் சிறையிடல், அவர்களை இயற்கையினின்றும் செயற்கைக் கொடுமையால் பிரித்தல், அவர்களைப் பட்டினியான மெலிவித்தல், அவர்களை மூதேவிகளாகக் கருதல், ஒருவன் பல பெண்டிர்களை மணத்தல், நகர மூதாளன் கட்டழகுக் கன்னியை மணத்தல், பெண் விபசாரத்துக்கு மட்டுந் தண்டனை அத்தண்டனை ஆணுலகிற்கின்மை, திருமணம் என்னும் பெயரால் பெண்ணை விற்றல் வாங்கல், இன்னோன்ன சிறுமைக் கொடுமைகள் நாட்டினைப் புகுந்து நாட்டைக் குலைக்கின்றன. இக் கொடுமைகள் இளைஞர் உலகில் முற்றுங் களையப்படல் வேண்டும்.

எதற்குஞ் சட்டங்களை எதிர்பார்த்தல் கூடாது. சமூகங்களை சீர்திருத்தஞ் செய்து கொள்வதுதலன். சமூகங்கள் அந்நிலையைத் தாமிடுஞ் சட்டங்கள் புதுக்குவது அறம். சீர்திருத்தச்சட்டங்கள் பிறக்கும்வேளையில் அவைகட்குத் தடை விளைத்தல் முன்னேற்றத்தை நாடுவதாகாது. இப்பொழுதுள்ள ஹிந்து சட்டங்களில் பல சிறப்பாக பெண் மக்கள் உரிமைகட்குஞ் சட்டங்கள்— கால நிலைக்கேற்ற முறையில் சீர்திருத்தஞ் செய்யப் பெறல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட குறைபாடுகளுள் சில உங்கள் வகுப்பில் இல்லை. இல்லையேனும் பெண்ணுலகச் சீர்திருத்தத்திற்கு உங்கள் ஒத்துழைப்பு வேண்டற்பாலதே.

பெண்ணுலகச் சீர்திருத்தம்பெரிதும் ஆண் இளைஞர் மனோ உறுதியைப் பொறுத்து நிற்கிறது. ஆணுலகம் பெண்ணைக் காமக்கூடாகக் கருதிக்கொண்டிருக்கு மட்டும் பெண்ணுலகம் வளர்ச்சி யுறாது. பெண்ணுலக வளர்ச்சி யில்லையேல் மற்ற உலகத்துக்கும் வளர்ச்சியில்லை. இனியாதல் ஆணுலகம் பெண்ணுலகிற்கு மதிப்பும் உரிமையும் நல்க முந்துவதாக.

கோயில்.

மிகப்பழைய காலத்தில் கோயில் வழிபாடு கிடையாது. அக்காலில் இயற்கை வழிபாடொன்றே வழக்கிலிருந்தது. மீண்டும் அவ்வழிபாட்டைப் புதுக்க வேண்டுமென்பது எனது தணியா வேட்கை. இப்பொழுது அவ்வழி பாட்டைப் பற்றி நூற்களில் எழுதும் அளவோடு நின்றுகொண்டிருக்கிறேன். கண்ணுக்குப் புலனாகும் இயற்கை வழி கண்ணுக்குப் புலனாகாத இறையை வழிபடலே சிறந்த வழிபாடென்று எனது ஆராய்ச்சியும் அடைவும் அறிவுறுத்துகின்றன. உலகில் பின்னாளில் தோன்றிய பல திற வழிபாடுகளெல்லாம் இயற்கை வழி பாட்டினின்றும் பிறந்தனவேயாகும். இது நிற்க,

நமது நாட்டில் கோயில் வழிபாடு பெருகியதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று பௌத்தமத வழிபாட்டமைப்பு; மற்றொன்று ஓவிய வுணர்வுப் பெருக்கு.

தொடக்கத்தில் கோயில் அமைப்பும் வழிபாடும் பொருளுடையனவாகவே யிருந்தன. இயற்கையின் உறையுள் இறைவன் என்னும் உண்மையை அறிவுறுத்துங் கருவிகளாகவே அவைகள் துணைபுரிந்து வந்தன. நாளடைவில் அவைகள் தங்கள் நோக்கினின்றும் வழுவி வீழ்ந்தன. எருசலேமில் கோயில்களின் பாழ்பட்ட நிலையைக்கண்ட கிறிஸ்து பெருமான் கோயிலை 'கள்ளர் குகை' என்று சொற்றதையும் தற்போது நமது கோயில்களின் சீர் கெட்ட நிலையை நோக்கி மகாத்மா காந்தி கோயிலை "வேசையர் விடுதி" என்று கூறியதையும் ஈண்டு உங்கட்கு நினைவூட்டுகிறேன். சில குக்கிராமங்களில் மிகச் சில கோயில்கள் ஆண்டவன் நினைவூட்டும் அன்பு நிலையங்களாக இன்றும் நிற்கின்றன.

இழி நிலையுற்றுள்ள பெருங் கோயில்கள் மீண்டுஞ் சீர்திருத்தமுறுமா என்பது ஐயம். இதைப் பற்றிப் பல திறக் கருத்து வேற்றுமைகளுண்டு. கோயில்களைச் சீர்திருத்த முயல்வோர் முயல்க.

கோயில்கட்கென நிதி ஏற்பட்ட நாள் தொட்டுக் கோயில்களின் உண்மை நிலைக்கு ஊறு ஏற்பட்டது. நிதியுள்ளவிடத்தில் நீதி நிலவுமோ?

கோயில்களில் சாதிப்பேய் தாண்டவம் புரிகிறது. பிறப்பை யொட்டிய சாதி வேற்றுமை கோயிலில் என்று நுழைந்ததோ அன்றே ஆண்டவன் அருள்மணம் குலைந்தது. எங்கும் நிறைந்த ஆண்டவனை வழுத்தற்கென அமைக்கப்பெற்ற ஒரு நிலையத்தில் கூடவா சாதிப் பாகுபாடு? இக்கொடுமையுள்ள நாட்டில் 'கடவுள் திருவருள் கொழிக்குமோ? இளைஞர்களே! உங்கள் முன்னோர்கள் முயற்சியால், செல்வத்தால் கட்டப்பெற்ற இப்பாண்டி நாட்டுக் கோயில்களில் உங்கட்கு இப்பொழுது இடமில்லை! என்ன கொடுமை! பன்றிக்கு அருள் சுரந்த பரமன், கருக் குருவிக்குக் கருணை செய்த கடவுள், நாரைக்கு முத்தி கொடுத்த நாதன் ஆறறிவுடைய மக்கள் வரவையா தகைவன்? இக்கொடுமையைப் பேசிப் பேசி எனது நாவும் மரத்துவிட்டது; எழுதி எழுதி எனது கையுங் காப்பேறி விட்டது. பேச்சாலும் எழுத்தாலும் இனி விளைவதொன்றுமில்லை.

இக்கொடுமைகளுடன் வேறொரு கொலை கோயில்களில் நடைபெறுகிறது. கோயில்கள் ஏற்பட்டபோது, அக்கோயில்களில் தொண்டாற்ற ஆண் அடியவர்களைப் போலப் பெண் அடியவர்களும் பேர்த்தார்கள். சிலபெண்மக்கள் தங்கள் கூடல் பொருள் ஆவி மூன்றையும் கோயில் வழிபாட்டிற்கென்றே அர்ப்பணஞ் செய்தார்கள். நாளடைவில் கொழுத்த கோயில் குருக்கண்மாரும், கோயில் அதிகாரிகளும் அவ்வடியார்களைக் காமக் கிழத்தியர்களாகக் கொண்டு அவர்களை ஒருதனி வகுப்பாராகவு மாக்கிக் கொண்டார்கள். அவர்கள் வழி வழி வருவோர் ஆண்டவன் பெயரால் பொட்டுக் கட்டிக் கொண்டு மானம் விற்கும் விலை மாதராகிறார். இப்பொட்டுக் கட்டுதலைச் சட்டத்தால் தகைய முயன்றால், சமயத்தின் பெயரால் மறுப்புக்கள் புறப்படுகின்றன. இப்பாழும் நாட்டுக்கு உய்வுமுண்டோ? இளைஞர்களே! நாம் எந்நாட்டில் வதிகிறோம்? புத்தர் பிறந்த நாட்டிலா? திருவள்ளுவர் பிறந்த நாட்டிலா? இல்லை; இல்லை. அந்நாடுகள் மறைந்துவிட்டன. நாம் இப்பொழுது வதிவது பேய்நாடு; நோய் நாடு. நரகக் குழியில் நாம் வதிகிறோம். தெய்வத் தன்மை பொருந்திய பெண்ணுலகின் ஒரு பகுதியை ஆண்டவன் பெயரால் அலகையாக்குவது கொடுமையா? கொலையா? சகோதரிகளே! சகோதரர்களே! உன்னுங்கள்; உன்னுங்கள்.

சாதிக்கொடுமையும் பெண்கொலையும் நிகழும் நிலத்தில் நீதிக்கடவுள், அன்புக்கடவுள், அறக்கடவுள் வீற்றிருப்பனோ? இக்கொடுமையும் கொலையும் நிகழுங் களத்துக்கு அன்பர்கள் ஏகலாமோ? இக்கொடுமை கொலைகளைப் பற்றிப் பேசிவிட்டு, எழுதிவிட்டு, மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றி விட்டுக் கோயில்கட்குப் போவதால் அப்பேச்சுக்கும் எழுத்துக்கும் அத்தீர்மானத்துக்கும் ஆண்டவன் அருள் செய்வனோ?

சாதிக் கொடுமையினின்றும் பெண் கொலையினின்றும் கோயில்களை விடுதலைசெய்யப் பலர் பல வழி கூறுகிறார்; சிலர் மூர்க்க சக்தி துணைகொள்ள வேண்டுமென்கிறார்; சிலர் சத்தியாக்கிரகமே சாலச்சிறந்த தென்கிறார். இரண்டில் பின்னையதைச் சிறந்தது என்று யான் சொல்வேன். கோயில் கொடுமை போக்கப்பேசுவோர் அனைவரும் அக்கோயில் புகாநிருக்கவும், விழா செய்யாநிருக்கவும், பிறகிழத்தாநிருக்கவும் உறுதிகொண்டால் நலன் விளையாமற்போகாது. ஆனால் உறுதி கொள்வோர் எத்துணை பேர்?

உங்கள் பெரியோர்கள் சில விடங்களில் புதுக்கோயில்கள் அமைத்து வருவதாக அறிகிறேன். அக்கோயில்களில் சமரசத் தெய்வம் தாண்டவம் புரியுமாறு செய்யவேண்டுவது உங்கள் கடமை.

ஆண்டவன் வழி பாட்டிற்கெனக் கோயில் ஏற்பட்டது. அதன் நோக்கத்துக்குக் கேடு நேரின் முறையை மாற்றிக் கொள்வதே அறிவுடைமை. தற்காலக் கோயில் வழிபாட்டால் இயற்கை எண்ணமும் உயிர்கள் வழிபாடும் அருகுகின்றன. கோயில் முறை கோவிய காரணங்கொண்டு ஆண்டவன் அருள்நெறியை எவரும் விடுதலாகாது. எவரெவர்க்கு எவ்வெச் சமயவேதங்களில் அன்பு நிகழ்கிறதோ அவரவர் அவ்வவ் வேதத்தைப் படிக்கலாம். ஆண்டவன் அருள் பெற்ற அடியார் மொழிகளே நமது வாழ்வுக்குக் கொழுத் தொம்பு. அவர்கள் அருண் மொழித் துணையால் நமது உள்ளத்தையே கோயிலாக்கிக் கொள்ளலாம். உள்ளத்தைக் கோயிலாக்கிக் கொள்வோர் உயிர்கள் வழிபாட்டிலேயே உறைந்து நிற்பர்.

"காயமே கோயி லாகக் கடிமன மடிமையாக, வாய்மையே நாய்மையாக மனமணியிலிங்க மாக, நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப், பூசனை யீசனார்க்குப் போற்றலிக் காட்டி னோமே" (அப்பர்.)

"உள்ளம் பெருங்கோயி லாவுடம் பாலயம், வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுரவாசற், றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம், கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே" (திருமூலர்.)

அரசியல்.

இளைஞர்களாகிய உங்கட்கு அரசியல் தொடர்பு வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிப் பலதிறக் கருத்து வேற்றுமைகளுண்டு. இளைஞர்கட்கு அரசியல் ஞானம் வேண்டுமென்றே யான் சொல்வேன். ஈண்டு அரசியல் ஞானம் என்பது அரசியல் வளர்ச்சியையாதல் அரசியல் கட்சிகளையாதல் குறிப்பதன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாடு உரிமையிழந்த நாடு. உரிமையிழந்த நாட்டில் அரசியல் கட்சிகள் பல தோன்றுதல் கூடாது. நாடு உரிமைபெற்ற பின்னைப் பன்னூறு அரசியல் கட்சிகள் தோன்றலாம். உரிமை யில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் தோன்றுமேல் அவைகளால் நாட்டில் உட்பகை குழப்பம் பிளவு பிணக்கு முதலிய தீங்குகளே விளையும். இத்தீங்குகளை விளைவிக்கும் அரசியல் கட்சிச் சேற்றிலா இளந்தளிர்களைப் புரளுமாறு சொல்வேன்?

"நாட்டின் விடுதலைக்கு உழைக்கத் தக்கவர் இளைஞர்ஸ்லரோ!" என்று அரசியல் அறிஞர்கள் கேட்கலாம். இதற்கு "ஆம்" என்று உடன்பாட்டு முறையிலே விடையிறுக்கிறேன். நாட்டின் விடுதலைக்கு உழைக்கத்தக்கவர்கள் இளைஞர்கள் என்பதில் ஐயமில்லை. நமது நாட்டின் விடுதலைக்குரிய வழியெதுவோ அவ்வழி நின்று இளைஞர்கள் தொண்டாற்றலாம்.

நாட்டுக்கு உரிமை வழங்கல் என்னும் முழக்கத்துடன் பற் பல கிளர்ச்சிகள் தோன்றின. அவையாவும் சிலர்க்குப் பதவி பட்டம் வழங்குவனவாகவே முடிந்தன. ஒரு கிளர்ச்சி மட்டும் நாட்டுக்கு உண்மையில் உரிமை வழங்கும் நோக்குடன் தோன்றி இயங்கிற்று. அதுவே "ஒத்துழையாமை" என்பது. அப்பேரியக்கம் வெற்றி பெற்றதா? இல்லை. இதனால் விளங்குவதென்னை? முழு உரிமைக்கு நாடு இன்னுந் தன்னைப் பண்படுத்திக் கொள்ளவில்லையென்பதே. எனவே இக்கிலையில் நாட்டுக்கு நாம் ஆற்றத்தக்க முதற் கடமை யாது? நாட்டை முழு உரிமைக்கும் பண்படுத்தத் தொண்டு புரிவதே யாகும்.

பதவி பட்டங்குறிக்கொண்டு அரசியல் கட்சிகளை வகுத்து வெறுங் கிளர்ச்சி மட்டுஞ் செய்வதால் நாடு ஒரு போதும் பண்படாது. அக்கிளர்ச்சி செய்வோர் செய்க. அதைப் பெரியோர்கட்கு விடுத்தலிடலாம். இளைஞர்கள் ஏன் அவ்வெரியில் மூழ்கிக் கரிதல் வேண்டும்? பின்னை இளைஞர்கள் நாட்டுக்கு என் செய்தல் வேண்டும்? விடுதலைக்கு நாட்டைப் பண்படுத்துந் துறையிலிறங்கி அவர்கள் உழைத்தல் வேண்டும்.

ஒத்துழையாமை யெடுக்கத்துக்குத் துணை நின்ற கொடுமைகளைக் களைய முயல்வதே நாட்டின் விடுதலைக்கு வழி தேடுவதாகும். அக்கொடுமைகள்யா? பிறப்பு வழி வகுப்பு வேற்றுமை கருதல், மக்களுக்குள் தீண்டாமை நிகழ்தல், பெண்ணடிமை, இன்னோன்ன பிற. இக் கொடுமைகளைக் களையப் புகுவதே இளைஞர்க்குரிய தற்காலத் தொண்டெனத் தோன்றுகிறது. கதர்த்தொண்டையும் உடன் சேர்த்துக் கொள்க. ஆதலால் இளைஞர்கள் வெறுங்கிளர்ச்சி எரியில் வீழாமலும் கட்சிச் சேற்றில் நெளியாமலும் நாட்டிலுள்ள குறைபாடுகளைப் போக்கவல்ல சீர்திருத்தத் தொண்டில் நிலைப்பட்டுழைப்பார்களாக. இத் தொண்டே ஆக்க வேலையென்பது. அவ்வாக்க வேலையை தற்போதைக்குச் சிறந்த தேசப் பணியாகும். இளைஞர்க்குரிய பணி இதுவே.

இறுவாய்.

இளஞ் சகோதரிகளே! சகோதரர்களே! இது காறும் எனது புலவிய உரையைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் பெருக் தகைமைக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். நீங்கள் இளமை யின்பத்தில் திளைக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்; பகைமை பொறாமை யறியாத இளமை நிலத்தில் தக்க விதைகளை விதைத்துக் கொள்ளுங்கள்; உடலை நல்வழியில் ஓம்புங்கள்; கற்பன கற்றுக் கடவுள் நெறி நில்லுங்கள்; கடவுள் நெறி நின்று நாட்டிலுள்ள குறை பாடுகளைக் களையுந் தொண்டி லிறங்குங்கள்; அத்தொண்டுக்கு நுண்ணறிவுமையாத குணமெனுங் குன்றேறி நில்லுங்கள்; பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை யுணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள். நமது நாடு நாடாயிருக்கிறதா? நமது அன்னைக்கு முடியுண்டா? உடை யுண்டா! போதிய உணவுண்டா? தாய்முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயங் துடிக்கிறது. சாதிவேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை, உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன. இந்நோய்களால் அவள் குருதியோட்டங் குன்றிக் கவலையுற்றுங் கிடக்கிறாள்; இளஞாயிறுளி நோக்கி நிற்கிறாள்; இளஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள். ஆண்டவன் உங்கட்கு அருள் செய்வான்.

திருத்தம்.

6-வது பக்கம் நாலாவது கலத்தின் கடையில் "இதன் தொடர் 5-ம் பக்கம் பார்க்க" என்றிருப்பதை "இதன் தொடர்பு 4-ம் பக்கம் பார்க்க" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

(ப—ர்.)

வாலிப நாடார்களே! நமது குல, தேச முன்னேற்ற வேலைகளில் விழிப்புக் கொண்டு விரைந்து வீரிட்டெழுங்கள். நீங்கள் மனம் கொண்டால் எல்லாம் வெற்றியே!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(8-ம் பக்கத்தின் தொடர்பு.)

காது. ஆதலால் இவ்வுலகில் நாம் நல்வாழ்வு நடாத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்நல்வாழ்வே சமய நெறி என்பது.

சமய நெறி என்றதும் நாலம், வேடம், விழா முதலியவற்றின்மீது கருத்துச் செலுத்தி அவைகளே சமயம் என்று கொண்டு இடர்ப்படலாகாது. அவைகள் சாரங்கள் போன்றன. இக்காலில் அவைகள் சாரங்களாகவுந் துணை புரிவதில்லை. சமய ஒழுக்கத்தையே குலைக்குங் கூற்றுகளாக அவைகள் மாறி நிற்கின்றன. அவைகளே சமயம் என்று கருதிச் சமயத்தைக் குறைகூறல் அறிவுடைமை யன்று.

அன்பை வளர்த்து வளர்த்து, அன்பில்தோய்க்துதோய்ந்து, அன்பின் முழு நிலையெய்த முயல்வதே சமய நெறி நிற்றலாகும். உள்ளத்தில் அன்பு நிலவும் போது எவ்வுயிர்க்காதல் தீங்கு செய்யும் எண்ணம் எழுகிறதா? இல்லை. பின்னை எப்பொழுது தீ நீர்மை இடம் பெறுகிறது? உள்ளத்தில் பகைமை முருகி யெழும்போது பிறர்க்குத் தீமை செய்யும் தீ நீர்மையும் உடன் எழுகிறது. தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதாமைக்கும், கொலை களவு முதலிய பெரும் பாவ நிகழ்ச்சிகட்கும் மூலமாயிருப்பது எது? அன்பின் குறைபாடே யாகும். முழு அன்பு எத்தீமைக்கும் இடந்தாராது. எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமை என்னும் பேரறம் வாழ்வில் அரும்பவேண்டு மேல், நாம் என் செயல் வேண்டும்? என்றும், அன்பை நினைந்து நினைந்து, அன்புவினையாற்றி, அன்பு வாழ்வு நடாத்தும் செந் நெறி நிற்றல் வேண்டும். அச்செந் நெறியே சமயநெறி யென்பது.

அன்பாவது அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீ நீர்மைகள் இல்லா விடத்தில் பொலிவ தென்பது எவர்க்குந் தெரியும். அவ்வன்பே கடவுள். "கடவுள் அன்பாயிருக்கிறார்" என்று சுவிசேஷஞ் சொல்கிறது. "அன்பு சிவமு மிரண்டென்பர் அறிவிலார் - அன்பே சிவ மாவ தாரும் அறிகிலார் - அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின் - அன்பே சிவமாயமர்க்திருப்பாரே" என்று திருமந்திரஞ் செப்புகிறது. அவ்வன்புக் கடவுளோடு தொடர்பு கொண்டு வாழ்வதே சமய நெறி நிற்பதென்க.

இச்சமய நெறி இவ்வுலக வாழ்வைத் தூய் மைப்படுத்தி மறுவுலக நல் வாழ்விற்கு அடி கோலுவது. பின்னை மெய் வாழ்விற்கு அடி கோல வல்ல ஒரு நெறி வாழ்விற்கு எத்துணை இன்றியமையாதென்றுஇயம்பவும் வேண்டுமோ? இளைஞர்களே! "சமயமென்ன" என்று கவலையேனமா யிராதேயுங்கள்; பின்னை வாழ்வு சமயத்தையே பொறுத்து நிற்பதையுன்னுங்கள். பின்னை வாழ்வுண்மை ஆராய்ச்சி யுலகில் உறுதி பெற்று விட்டது. இன்னும் என்ன ஐயம்? ஆதலால் சமய நெறி நிற்க முயலுங்கள்; முயலுங்கள்.

"உலகில் பல கடவுளர், பல சமயங்கள் இருக்கின்றனவே; எக் கடவுளைத் தொழுவது; எச்சமய நெறி நிற்பது" என்று சிலர் ஐயுறலாம். அப்பன்மை யுணர்வு முதலாவது ஒழிதல் வேண்டும். கடவுளர் பலரில்லை; சமயங்களும் பலவில்லை. ஆனால் கடவுளையும் சமயத்தையுங் குறிக்கத்தக்க பெயர்கள் பல உண்டு. மொழிகள் பலவுள்ள மட்டும் பல பெயர்களிருந்தே தீரும். அறிஞர்கள் அப்பெயர்ப் பொருளையே கொள்வார்கள். பெயர்ப் பன்மை கொண்டு சமயப்போரில் இறங்குவது மடமை. சமயப்போரில் தலைப்படுவோர் இவ்வுலகிலும் அன்பு நிலை யிழந்து மறுவுலகிலும் நிலைபேறான வாழ்வு பெறாது இடர்ப்படுவர்.

கடவுள் நெறி ஆங்காங்கே தோன்றிய அருளாளர்களால் அறிவுறுத்தப் பட்டது. அவ்வறிவுறுத்தல் உலகில் பல சமயங்களாகக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு சமயத்தையும் அருளித் தருவி னாலும் கடவுள் ஒருவர் என்பதும், அவர் அன்பு வடிவினர் என்பதும், செவ்வனே பெறப்படும். மக்கள், அருளாளர்கள் அறிவுறுத்திய கடவுள் நெறியெனுஞ் சமய நெறி நின்றொழுக வேண்டுமேயன்றிக் காய வெகுளி மயக்கத்தால் சமயவாதத்திலிறங்குவது அறியாமை. சமயவாதங்களால் விளையுங் கேடுகளைக் காணுஞ் சிலர் "சமயமே வேண்டாம்" என்று கூறத் தொடங்குகிறார். இஃது ஆராய்ச்சியுந் தெளிவு மில்லாதார் கூற்று. சமயவாதத்தை வெறுத்துத் தள்ள வேண்டுமே யன்றிச் சமய வாழ்வை வெறுத்துத் தள்ளலாகாது.

பண்டைத் தமிழர்கள் வாழ்விற்கு இன்றியமையாத சமய நெறியை மிகத் திறம்பட வகுத்துச் சென்றார்கள். பழந்தமிழர்கள் அழுகுக் கடவுளை இயற்கை வாயிலாகப் போற்றினார்கள்; இயற்கை வழி பாட்டை அக்கடவுளுணர்விற்குரிய நெறியாகக் கொண்டார்கள். பின்னே அவ்வழகுக் கடவுள் பல பெயர் பெற்றது. அப்பெயர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடவுள் பெயராகக் கொள்ளப்பட்டது. இயற்கை வழிபாட்டு முறையும் பலவாறு திரிபுபட்டது. ஒன்றிற்கே பல பெயர் என்னும் உணர் விலாதார் போர்த் துறைகளிலிறங்கி நாட்டு வாழ்வைக் குலைத்துக்கொண்டார். நாம் முன்னை யொருமையின் மீது கருத்துச் செலுத்துவதா? பின்னைப் பன்மையின் மீது கருத்துச் செலுத்துவதா? பின்னைப் பன்மைப்போர் நமக்கெற்றுக்கு? முன்னை ஒருமை அன்பையே நாம் கொள்வோம்.

அவ்வப்போது உலகிடைத் தோன்றிய பெரியோர்கள் சமரச ஞானத்தை அறிவுறுத்திச் சென்றார்கள். அவருள் நந்தமிழ் நாட்டிற்றோன்றிய பெரியோர்கள் அருளிய செம்மொழிகளில் சில வருமாறு:—"வாது செய்து மயங்கு மனத்தாரா, யாது சொல்லுவீரா கிலும் ஏழைகாள், யாதோர் தேவ ரெனப்படுவார்க்கெலாம், மாதேவ னலால் தேவர் மற்றில்லையே" (திருநாவுக்கரசர்). "எங்கு வந்துறுகோ என்னை யாள்வோனே ஏழுலகங்களும் நீயே, அங்கவர்க்கமைத்த தெய்வமும் நீயே, அவற்றவை கருமமும் நீயே, பொங்கிய புறம்பால் பொருளுள வேலும் அவையுமோ நீயின்னே யானால், மங்கிய அருவாம் கேர்ப்பமும் நீயே, வான்புலனிறந்ததும் நீயே" (நம்மாழ்வார்). "ஆன சமயம் அது வீத னன்றெனும், மாய மனிதர் மயக்க மதுவொழி, கானங் கடந்த கடவுளை நாடுமின் ஊனங் கடந்த உருவது வாமே" (திருமூலர்). "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின், விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல்லால், மாறுபடுங் கருக்கில்லை முடிவின் மோன, வாரிதியில் நடித்திரார் போல் வயங்கிற்றம்மா" (தாயுமானார்). "எவ்வகைச் சார மகங்களிலே பொய் வகைச் சாத்திரங்கள் எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது செய்வம் என்று கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்றறியீர்" (இராமலிங்க சுவாமிகள்). "ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள். பாத சமயம் பொருள் நூல் யாகிய கென்னில் இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி. நீதியினால் இவையெல்லாம் ஒரிடத்தே காண நிற்பது யாதொரு சமயம் அது சமயம்" (அருணந்தி சிவம்).

இப்பொழுது சமரச ஞான வேட்கை யான்டுங் கிளம்பியிருக்கிறது. அவ்வேட்கை தணிக்கத் தமிழ் அறிஞர்கள் முன்னரே தமிழ்க் கேணிகள் உதவியிருக்கிறார்கள். அக்கேணிகளிலிறங்கித் தண்பனல் அருந்துமாறு இளைஞர்களை வேண்டுகிறேன். இளைஞர்கள் சமரசச் சமயநெறிபற்றி நடப்பார்களாயின், உலகில் சமயப் போர் தொலையும்; ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதலும் ஒழியும். எங்குமுள்ள கடவுள் ஒரு சமயத்தில் வீற்றிருந்து மற்றச் சமயத்தில் வீற்றிரார் போலும்! அகண்டாகார ஆனந்தப் பொருளைக் கண்டப் படுத்தி இடர்ப்படுவது அறியாமை. "எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்-அங்கங்கிருப்பது நீ அன்றோ பராபரமே" என வரு உத்தரயுமானார்திருவாக்கையோர்க.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளை எப்படி வழி படுவது? உலகில் பலநிற வழிபாடுகளிருக்கின்றன. அவைகளைப் பற்றிய ஆராய்ச்சி ஈங்கு வேண்டுவதில்லை. உயிர்கள் வழிபாடு எல்லா வழிபாடுகளினுஞ் சிறந்தது.

எவ்வுயிரையுந் தன்னைப் போல் கருதி, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாது நலஞ் செயப் புகுவதே சிறந்த வழிபாடாகும். உயிர்களுக்குச் செய்யுந்தொண்டே கடவுளுக்குரிய தொண்டாகும்.

அண்டவன் எங்குமுளான் என்னும் உணர்வு வளர வளர மக்கள் எக்காரணம் பற்றியும் உயிர்கட்குத் தீங்குசெய்ய ஒருப்படார்கள். எவ்வுயிரிலுங் கடவுளிருப்பை உணரும் ஒருவன் கொலை, களவு முதலிய மறவினைகளை ஆற்றுவனோ? ஆற்றான்; ஆற்றான். இவ்வருணெறியே சமய நெறியாகும்.

"எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" (சைவ சமயநெறி). "தம்முயிர்போ லெவ்வுயிருந்தா னென்று தண்ணருள்கூர், செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே"; "கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர், மற்றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே"; "எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே, யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" (தாயுமானார்). "எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கி உபகரிக்கின்றார் யாவர் அந்நாள், செவ்வியர் தஞ் செயலனைத்துந் திருவருளின் செயலெனவே தெரிந்தேன்"; "எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந் தம்முயிர்போல் எண்ணியுள்ளே, ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர் அவர் உளந்தான் சுத்த, சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான் தெரிந்தேன்"; "கருணை யொன்றே வடிவாகி எவ்வுயிருந் தம்முயிர்போல் கண்டு ஞானத் தெருணெறியிற் சுத்த சிவ சன்மார்க்கப் பெருநிதி செலுத்தா நின்ற, பொருணெறி சற்குண சாந்தப் புண்ணியர்" (இராமலிங்க சுவாமிகள்).

கொலை, களவு முதலிய தீமைகளை ஒழிக்க வல்லது சமய நெறியொன்றே என்று அறைகூவுகிறேன். அந்நெறி பற்றி ஒழுகுமாறு இளைஞர்களை வேண்டுகிறேன்.

உயிர்கள் சேவை யென்று மனிதர் மக்களைத் துறந்து ஓடுவது சமய நெறி யாகாது. மனிதர் மக்களும் உயிர்களே. அவ்வுயிர்களிலும் ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான். ஆவ்வுயிர்கட்குஞ் சேவை செய்யவேண்டுவது நமது கடமை போலித்துறவு, வாய்வே தாந்தம் இவைகளால் நாடு உற்றுவரும் அல்லலுக்கோர் அளவில்லை. அத்துறவில்—அவ் வேதாந்தத்தில் இளைஞர்களே! எக்காரணம் பற்றியுங் கருத்துச் செலுத்தாதேயுங்கள். மனைவி மக்களோடு வாழ்ந்து, கெட்ட எண்ணங்களைக் களைந்து எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுஞ் செய்கை வேதாந்தத்தில் தலைப்படுங்கள்.

எவ்வுயிரையுந் தன்னைப்போல் கொண்டு போற்றுஞ் சமயநெறி யென்னும் ஒரு பெரு நெறியில் நடப்பதைத் தகையவல்ல சிறுமுட்சுரங்கள் ஆங்காங்கே பெருகியிருக்கின்றன. அவைகள் நாட்டுக் கேற்றவாறு உருக்கொண்டிருக்கின்றன. நமது நாட்டு வாழ்வுத் துறையில் படிந்துகிடக்கும் முட்டுப்பாடுகள் பலப் பல. அவைகளைச் சீர்திருத்தப் புகுவது நற்போதைக்கு சிறந்த தெய்வத் தொண்டாகும். ஈண்டுச் சில வற்றை மட்டுங் குறிக்கிறேன்.

சடங்குகள்.

சடங்குகள் பல காரணம்பற்றி ஒவ்வொருபோது, ஒவ்வொரு நாட்டில், ஒவ்வொரு விதமாக ஏற்படுகின்றன. தொடக்கத்தில் அவைகள் சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. பின்னோர்ச்சியில் அவைகள் பெரிதும் பொருளற்ற குருட்டு முறைகளாக மாறிவிடுகின்றன. அப்பொழுது அவைகள் இயற்கை வெற்படி சீர்திருத்தம் பெறுகின்றன. மீண்டும் அவைகளில் இருள் சூழ்ந்து விடுகிறது. மறுபடியும் அவ்விருள் அகற்றப்படுகிறது. இவ்வாறு சடங்குகள் சுழன்று கொண்டேயிருக்கும். ஒல்லும் வகை சடங்குகளைச் சுருக்கி, அவைகளில் கண்மூடி வழக்கங்கள் நுழையாதவாறு காத்துவரல் வேண்டும்.

இக்காலில் நமது நாட்டில் நடைபெற்று வருஞ் சடங்குகளில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவைகளில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கிறேன். ஒன்று சடங்குகளைச் சமயத்துடன் தொடர்புப் படுத்துவது. மற்றொன்று பிறப்பில் குறிக்கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ, தேகினையோ, பார்ப்பானையோ, பிறனையோ அழைப்பது. இன்னொன்று குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே மந்திரஞ் சொல்ல வேண்டுமென்பது.

சடங்குகட்குஞ் சமயத்துக்குந் தொடர்பில்லை. சடங்குகள் வேறு; சமயம் வேறு. இரண்டையும் ஒட்டவைத்தல் அறியாமை. நல்வினை தீவினைகட்குக் குறிப்பிட்ட ஒரு வகுப்பார் அல்லது குறிப்பிட்ட ஒரு மனிதன் வேண்டுவதில்லை. அவ்வக் குடும்பத்திலுள்ள ஒரு முதியோரை வினைவளாற்றக் கொள்வது நலன். மந்திரம் குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்னும் நியதியில்லை. அவரவர் தத்தம் தாய் மொழியில் மந்திரம் வகுத்துக் கொள்ளலாம்.

(இதன் தொடர்பு 5-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நல்லூர் ஆதீனம்.

(2-ம் பக்கத்தின் தொடர்.)

பெருமை அல்லது வாழ்க்கைத் துணை" என்னும் நூலிற்காண்க.

பாண்டிநாடு, கிரீஸ், ரோம், பாபிலோன் முதலிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. வாணிபத்துக்குரிய துறைகள் பல வளம்பட்டிருந்தன. கல்வி நிலை குறிக்கச் சங்க நூல்களே சாலும். வாழ்விற்கு இன்றியமையாத துறைகள் பல அமைந்திருந்தன. பழம் பெருமையை இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

இளைஞர்களே! உங்கள் பாண்டிநாட்டின் அறிவு நிலையையும் தருகுவீர், இற்றை நிலையையும் தருவீர். இந்நாளில் பாண்டி நாடு சாதிப் பணக்காரர்களாலும் சமயப் பூசகர்களாலும் மோதுண்டு உடைந்து உடைந்து நெறுண்டு கிடக்கிறது. அதை நன்பால் ஒருமைப்படுத்துங் கருவிகள் நீங்களே. பாண்டிப் பழமை உங்கட்குப் போதிய சக்தி வழங்கும். அப்பழமை காணப் பழக் கருவி கொண்டெழுங்கள்; எழுங்கள்.

உடலோம்பல்.

இளைஞர்கள் உடலோம்பல் மீது பெருங்கவலை செலுத்தல்வேண்டும். இவ்வுலக இன்பத்தை நேரிய வழியில் துய்த்தற் பொருட்டே கடவுளால் அளிக்கப் பெற்ற உடைமை இவ்வுடல். இக்உடலை இளமையிலேயே வளம்படுத்திக் கொள்ளல் வேண்டும். இளமையில் உட்பகைகளாகிய கவலை ஈனமாகக் கிடத்தல் பின்னே இவ்வுலக வாழ்நாளது துன்புறுதற்குக் கால்கொள்வதாகும். உடல் வளம் பெறாத ஒருவன் எச்செல்வம் பெற்றிருந்தாலென்னே? எப்பேறு பெற்றிருந்தாலென்னே?

நல்லுடலுக்கு அறிகுறி யென்னே? அகன்ற மார்பு, அழகியதாகும். அழகிலா உடல் நோயுடல் என்பதில் என்ன ஐயம்? அவ்வழகுக் கடவுள் கோயில் கொள்ளும் அகவை எது? இளமை இனமை என்று சொல்லவும் வேண்டுமோ?

இளமை அழகுக்குரியது. இக்கால இளைஞர்கள் முகத்தில் அழகு ஒழுகுகிறதோ? இளைஞர்களல்லவோ நாட்டின் செல்வம்! அச்செல்வம் எக்நிலையிலுள்ளது? அதை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது.

பொதுவாக நமது நாட்டு இளைஞர்களையும் சிறப்பாகப் பள்ளி மாணவர்களையும் கோக்குழி நாட்டுச் செல்வத்தின் நிலை புலனாகும். விழுந்த கண்ணும், வளைந்தமுதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையுமுடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனங் கோயில் கொள்ளும்? அழகென்பது யாது? அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில், மூக்குக் கண்ணாடியில், கழுத்துச் சுருக்கில், பட்டுடையில், பிற அணியில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல், மண்ணீரல், குண்டிக்காய் முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று ஒழுங்குபெறக் கடனாற்றலால் உறும் நாம்புக் கட்டினின்றும் குருதி யோட்டத்தினின்றும் முகிழ்க்குந் தசையிடை யரும்புவது அழகாகும்.

இவ்வழகு அரும்பா தொழிதற்கு மூலகாரணம் மலச்சிக்கலேயாம். வியர்வை முதலிய அழுக்குகளும் வெளி வாராது ஆங்காங்கே தேங்கலும் மலச்சிக்கலின் பாற்பட்டதே. மலச்சிக்கலால் பிணி யுறுகிறது. பிணியால் பேர் உறுப்புக்களின் இயக்கமும், நாம்புக் கட்டும் நிரந்த ஒட்டமும் குன்றுகின்றன. இக்குலைவால் அழகு உறைதற்கு இடனில்லாமல் போகிறது. ஆகவே மலச்சிக்கல் உறுதவாறு உடலோம்புதல் வேண்டும்.

மலச்சிக்கல் உறுதற்குக் காரணம் என்னே? காரணம் பலபடக் கூறலாம். சுருங்கச் சொல்லுகிறது இயற்கையோடியைந்த வாழ்வை, மீறுன்ன, பொருந்தா உணவு, தீயொழுக்கம், செயற்கை முறைக்கு இரையாதல், கடவுளிடத் தன் பின்மை, உயிர்களிடத் தன்பின்மை முதலியவற்றைச் சொல்லலாம்.

நல்லுடல் பேற்றிற்கெனப் பெருமுயற்சி செய்ய வேண்டுவதில்லை. வைறைத் துயிலெழுப் பயிலுதல்வேண்டும். எழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு, வியர்வை சிந்த ஏதாயினும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உடற்பயிற்சிகள் பல திறத்தன. அவரவர் உடல் நிலைக்கேற்ற வண்ணம் அவரவர் ஏதாயினும் ஒன்றைக் கொள்ளலாம். தண்டால், நீச்சு முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. எல்லாருங் கொள்ளத் தக்கதும் எளியதுமாயிருப்பது ஒன்று. அஃது உலாவுதல். கடையில் உடற்பயிற்சியும் காற்றிடை மூத்தலும் ஞாயிறொளியில் தோய்தலும் நிகழ்ந்துவிடுகின்றன. பின்னே நறுநீராடிக்கடவுளை நினைந்து குடிஊனத்தை அன்பு மயமாகிப் பொருந்திய உணவு கொள்ளல் வேண்டும்.

உணவு முறைகள் பெரிதுங் கவனிக்கற்பாலன. முதலாவது, வேளை நாழியின்றிச் சாப்பிடுவதை நிறுத்தல் வேண்டும். பசித்தோற்ற மில்லாத போது எச்காரணம் பற்றியும் உணவு கொள்ளலாகாது.

மீதூண் கொள்வது அறியாமை. நோய்க்கும் அகால மரணத்துக்கும் அடி கோலுவது மீதூண் மீறுனாகும். முன்னே உண்டது செரிப்பதற்குள் மேலே உண்டு உண்டு சுமை சுமந்திக் சொண்டிருந்தால் ஈரலுக்குச் சவலை ஏற்படும். பின்னே மற்றப் பேருறுப்புக்கட்குக் கேடு நிகழும். அதனால் பிணியும் அகால மரணமும் நேரும்.

பொருந்தா உணவுங் கூடாது. இப்பொழுது நமது நாட்டில் மக்கள் பலர் பொருந்தா உணவு உண்டு பல திறநோய் வாய்ப்பட்டு அகாலமரணத்துக்குட்படுகிறார். நமது தென்னாட்டார்க்கு நீவாதார உணவுப் பொருளாயிருப்பது அரிசி. அவ்வரிசி இயந்திரத்தால் கன்கு தீட்டப்படுகிறது. தவிட்டுக் கொழியல் ஜீரணத்துக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்டது. அது நீங்கிய அரிசி பொருந்திய உணவாகுமா? கொழியல் நீங்காத கைக் குத்தரிசியைச் சமைத் துண்பது சிறப்பு. கைக்குத்தாலுங் கொழியல் நீங்குதலாகாது என்பது கவனிக்கத்தக்கது. சமயல் மட்பாண்டங்களில் செய்வதே பொருத்தம்.

காய் கீரை முதலியவற்றை நாமே வீட்டுக்கொல்லைகளில் பயிரிட்டுக்கொள்வது கலன். ஞாயிறொளியிலுள்ள ஒரு வித சத்து, காய் கீரைகளிற் புகுந்து படிகிறது. அச்சத்து நீங்குதற்குன் அவைகளைச் சமைத்துச் சாப்பிடுதல் வேண்டும். இரண்டு நாள் மூன்றுநாள் வண்டிகளில் அடிபட்டு வறண்டு சத்திழந்த காய் கீரைகளைச் சாப்பிடுவது வெறும் மரத்துகளைத் தின்பதை யொக்கும். காய் கறிகளில் அளவு கடந்த புளி காரம் பெய்து சமைப்பதுகூடாது. நமது தென்னாட்டார்க்குப் புளி தாரப் பிந்து என்று விடுமோ அறிகிலேன்.

புலால் உணவுப் பித்து மற்றொன்று. புலால் உணவில் உடல் உரம் உண்டு என்று பிறர் கருதுகிறார். புலால் உணவில் மிழிந்து கிடந்த மேல்நாட்டு அறிஞர் பலர் இப்பொழுது புலால் உணவின் புன்மை தெரிந்து வருகிறார். புலால் உணவு பொருந்திய உணவின் பாற்பட்டதன்று என்று அன்னார் ஆராய்ச்சி முறையுடன் பல நூல் எழுதியிருக்கிறார். நம் முன்னோர்கள் ஜீவ காருண்யத்தை அடிப்படையாகக்கொண்டிப் புலாலுணவை மறுத்துக் கூறினார்கள். மேல்நாட்டு அறிஞர்கள் "புலால் உணவால்உடல் வளர்ச்சிகேடுண்டு" என்பதை ஆராய்ச்சியால் நிறுவிக் காட்டி அவ்வுணவை மறுக்கிறார்கள். ஆதலால் உடல்நலன் விரும்புவோர் புலாலுண்ணா திருப்பாராக.

காப்பி, டீ, கொக்கோ, இவல்டையன் முதலிய குடிகளையும் தொலைத்தல் வேண்டும். குளிர் மிகுந்த மேனாட்டறிஞரே அவைகளை இப்பொழுது விலக்கிவருகிறார். வெம்மை நாட்டில் வாழும் நமக்கு அக்குடிகள் ஏற்றுக்கு? நமது நாட்டில் ஷயரோகத்தைப் பெருக்கி வருவன அக் குடிகளேயாகும். அப்பானங்கட்குப் பதிலாக நீர்மோர், இளநீர் முதலியன கொள்ளலாம்.

கள், சாராயம் முதலியவற்றின் கொடுமையை ஈண்டுக் குறிக்க வேண்டுவதில்லை. இப் பொல்லாக் குடிகளால் மக்களின் ஈரல் முதலிய உறுப்புக்கள் அரித்து அரித்து எரிக்கப்படுகின்றன. இவைகளைக் கனவிலும் மறந்துங் கருதலாகாது.

புது நாகரீகத்தால் வேறொரு கொடுமை சிறப்பாக இளைஞர்களிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃதென்னே? சுருட்டு, சிகரெட் முதலியன பிடித்தல். சிறு சிறு குழந்தைகள் வாய்களும் புகை யந்திரங்களாக மாறிவிடுகின்றன. அவர்கள் நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப்படுவதைத் தொடக்கத்தில் உணர்கிறார்களில்லை. நாளடைவில் இளைஞர்கள் அழகிழந்த என்புக்கூடுகளாகிறார்கள்.

உடலுக்குக் கேடு விளைக்கத்தக்க வழக்க ஒழுக்கங்களில் இளைஞர்கட்குப் பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத்தீப் பயிற்சியுடைய இளைஞர்கள் மெல்ல மெல்ல அதை யொழிப்பார்களாக.

நல்லொழுக்கம் உடலோம்பலுக்கு இன்றியமையாதது. மீதூண் கொள்ளாத பொருந்திய உணவுகொள்ளும் ஒருவன் ஒழுக்கங் காவா தொழிவனேல் பயன் விளையாது. நல்லுணவுடன் நல்லொழுக்கமும் வேண்டற்பாலது. நல்லுணவு நல்லொழுக்கத்தின் பொருட்டே உண்ணப்படுகிறது. ஒழுக்கம் உடலுக்கு உயிர்போன்றது. "ஒழுக்கம் விழுப்பத்தலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் காயனார்.

பொறாமை, சினம், அவா, பிறர் மனை விழைதல், வறவரின் மகளிர் இன்பந் துய்த்தல் முதலிய தீய ஒழுக்கங்கள் உடல்வளனைக் கெடுத்தல் இயல்பு. கெட்ட எண்ணங்கள் உடலை எரிக்கும் எழுகா என்று சுருங்கச் சொல்கிறேன். கெட்ட எண்ணங்களுடன் உணவு கொள்வோன், உணவுடன் நஞ்சையுங் கலந்து உண்பவனாகிறான். இக்காரணத்தான் உண்பதன்முன் அன்புக் கடவுளை நினைந்து உணவு கொள்ளும் முறை நம் முன்னோர்களால் கோலப்பட்டது. அன்புக் கடவுளை நினைந்து, அக்கடவுள் கோயில்கொண்டுள்ள உயிர் நலங்கருதிப் போற்றுதல் கடவுள் வழிபாட்டில் ஒரு முறையாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வன்பு நினைவுடன் உண்பது உடலோம்புவதாகும்.

நமது நாட்டின் நிலைப்பப் பயிற்சியை உங்கட்கு நினைவூட்ட விரும்புகிறேன். பண்டைநாளில் நமது நாட்டில் முனிவர்கள் உள்ளிட்ட பலருஞ் நிலைப்பயிற்று வந்தார். இப்பொழுது அதன் நிலை எவ்வாறிருக்கிறது? நகரங்களில் அதன் பெயரே மறைந்துவிட்டது. அது தத்தாரிகளின் ஆட்டத்துக்குரிய தென்றுஞ் சில விடங்களிற் கருதப்படுகிறது. நிலைப்பத்துறை ஒவ்வொன்றும் உடலோம்பலுக்குரியது. அஃதெங்ஙனம் ஒரு சிற்றினத்துக்குமட்டும் உரியதாகும்? அது குறித்து ஈண்டுப்பலபடப் பேசாது நமது நாட்டுச் நிலைப்பப் பயிற்சியை உயிர்ப்பிக்க வேண்டுவது இளைஞர் கடமைகளுள் ஒன்று என்று சுருங்கக் கூறுகிறேன்.

ஆசனங்களைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். ஆசனங்கள் யோகெருக்குரிய சாதனங்கள் என்று பலரால் கருதப்படுகின்றன. அப்பிழைபட்ட கருத்து ஒழிக; ஒழிக. ஆசனங்களின் கூறுகள் இப்பொழுது நன்கு ஆராயப்பட்டன. உடலோம்பற்கு அவைகளினுஞ் சிறந்த சாதனங்கள் வேறொன்றுமில்லை என்று கூறல் மிகையாகாது. தோல், நரம்பு, சினை, உறுப்புக்கள், முதலுறுப்புக்கள் முதலிய எல்லாவற்றிற்கும் உர மூட்டும் ஆற்றல் ஆசனங்கட்குண்டு. துரிடத்திலிருந்து கொண்டே உடற்பயிற்சி செய்யும் முறைகள் நம் முன்னோர்களால் காணப்பட்டன. அவர்கள் அறிவுத்திறனை என்னென்று புகழ்வது!

வேறு பல யோக நெறிகள், சந்தியா வந்தன முறைகள், சரியை யாதித் தொண்டுகள் முதலிய யாவும் உடலோம்பலைக் குறிக்கொண்டே காணப்பட்டன என்பது ஏனது கொள்கை. அவை யாவும் ஆண்டவன் நினைவூட்டும் முறையில் கோலப்பட்ட பெருமை நமது ஆன்றோர்களுடையது. தற்கால பூதபௌதிக நூற்றுணை கொண்டு அப்பழைய முறைகளை ஆராய்ந்தால் அவைகளின் நுட்பம் புலனாகும்.

உடலோம்பி உடலை வளஞ்செய்த பின்னே இல்லறத்தி லிருக்கல்வேண்டும். இல்லறத்தின் இன்றியமையாமையைப் பற்றி "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் நூலில் "இயற்கையறம்" என்னும் பகுதியில் என்னால் இயன்றவரை விளக்கியிருக்கிறேன். இல்லறத்திலுள்ள பல நலங்களுள் உடலோம்பலு மொன்று.

இன்னோரன்ன பலநிற வழிகளில் உடலையோம்பி வரின் தோயற்ற வாழ்வெனுங் குறைவற்ற செல்வம் பெறலாம்: மறுமையிலும் இன்பம் நுகரலாம். ஆகவே நோயணுகா அழகுடல் பெற முயலுங்கள்.

மேல்நாட்டார், சிறப்பாக அமெரிக்க நாட்டார், உடலோம்பல் முறையை ஒழுங்குபடுத்தி வருகிறார். இயற்கையோடியைந்த எளிய வாழ்வை அன்னார் அறிவுறுத்தத் தொடங்கியிருக்கிறார். அவர் ஞாயிற்றின் ஒளிக்கணுள்ள சத்திகளை ஆய்ந்து ஆய்ந்து பல உண்மை காண்கிறார்; காற்று நீர் மண் முதலிய இயற்கைக் கூறுகள் வாழ்விற்கு நல்கிவருஉம் அருமைகளையெல்லாங் கண்டு வருகிறார். மக்களுடன் அழகு என்றும் நிலைத்து உறைதற்குரிய முறைகளைத்தெரிந்து வருகிறார். அழகு வளர்ச்சிக் கெனவும் காப்புக்கெனவும் பல கழகங்கள் ஆங்கே காணப்படுகின்றன. நாம் என் செய்கிறோம்? நமது காலம் எவ்வழியில் செலவாகிறது? இளைஞர்களே! ஓர்மின்! ஓர்மின்! நமது முன்னோர்களாய பழந்தமிழர்கள் அழகின் நுட்பம் தெளிந்து அழகையே கடவுளாகக் கொண்டார்களெனினி, அவர்கள் இயற்கையுடன் எவ்வளவு இயைந்து வாழ்ந்தார்கள் என்பது விளங்கும். அழகைப்பற்றியும் பிறவற்றைப் பற்றியும் "முருகன் அல்லது அழகு" என்னும் நூலில் விரிவாக எழுதியிருக்கிறேன்.

இளைஞர்களே! உடலோம்பலுக்குரிய அகவை யிதுவே. இவ்வேளையிலேயே உடலோம்பலிற் கருத்தைச் செலுத்துங்கள்; உடல் வளம் பெறு வாழ்வு என்ன வாழ்வு? நீங்கள் அழகுக் கொழுந்துகளாகப் பொலிதல் வேண்டும். உங்களைப் பார்க்கும்போது அழகுக் கடவுள் நினைவு தோன்றுதல் வேண்டும். ஆகவே அழகை எண்ணுங்கள்; அழகை யுண்ணுங்கள்; அழகாகுங்கள். நாடு முழுவதும் உங்களால் அழகு பெறல் வேண்டுமென்பது எனது பேராவல்.

வீரம்.

வாழ்விற்கு வீரம் வேண்டற்பாலது என்று பல நாட்டு ஆன்றோர் கூறியுள்ளார். வாழ்விற்கு வீரம் வேண்டற்பாலதே. வீரம் எது? பொறாமையினின் றெழும் மூர்க்க சக்தியே பெரிதும் வீரம் என்று வழங்கப்படுகிறது. அது தவறு.

பொறாமை, அழகுடல் பெற்ற அழகுனத்தில் எழுதல் தரிது. பொறாமை முதலிய தீ நீர்மைகட்கு அடிப்படை நல்லுடலின்மையே யாகும். குருதிநிலை கெட்ட உடலில், வெம்மை செறிதல் இயல்பு. அவ்வெம்மையினின்றும் சினம், அழுக்காறு முதலிய நச்சுக்குழவிகள் பிறந்துகொண்டே யிருக்கும். அவைகள் பிறரைத் துன்புறுத்தவே தூண்டும். அத்துன்புறுத்தல் எங்ஙனம் வீரமாகும்? மெலிந்த உடலில் குருதி கலறிய காரணத்தால் பொறாமை, வெகுளி நிரம்பிய உளத்தினின்றும் பிறப்பது வீரமன்று. அஃது அச்சமாகும். அச்சம் கருவி தாங்கச் செய்கிறது. அச்சம் பின்னரில் வீரமாகக் கொள்ளப்பட்டது. அதற்கேற்ற கதைகளும் எழுதப்பட்டன.

பிறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும்போது, அதைப்பொறுத்தலே வீரம். கோழைமையால் துன்பம் பொறுத்தல் வீரமாகாது. அன்பால் அதைப் பொறுத்தலே வீரம். வீரம் அன்பினின்றும் பிறத்தல் வேண்டும். இவ்

(இதன் தொடர்பு 3-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library, EBook collection

கடவுள் வணக்கம்.

அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு. (குறள்)

பெரியோர்களே! சகோதரர்களே!

நிருவருட் பேறும், தெவ சகாயமும் இவ்வுலகியில் ஆன்றோர் பற்றிய நம் மனோர்க்கு ... தகுதியும் வேண்டற்பாலன வென்பதை ஒவ்வொருவரும் அறிவோம். எனவே, இணையற்ற அவ்வுறு துணை யடைய வேண்டுவது என்றும் இன்றும் நம்பாற்பட்ட முதற் கடமையெனக் கொண்டு, அலகிங் சென்றபடி எங்கும் ஏகமாயும், மூப்புப் பிணியற்றவராயும், ஆதியந்த ரஹிதராயும், நிர்மல, நிராமய, நிர்விகல்பராயும், வேண்டியார்க்கு வேண்டியன ஈயும் அருட் சோதியினராயும் மிளிரும் எந்தத் தெய்வ முண்டோ, அவ்வாண்ட வனின் அருள் நோக்கம் நம் பங்கிலிருக்கவும், நீரும் எடுத்தாளும் நடவடிக்கைகளனைத்தும் முட்டின்றி இனிது நிறைவேறவும் அவரை வேண்டி வந்திந்தச் சிந்தித்துப் போற்றிப் பணிகுவாம்.

நகர் வளமும், வரவேற்பும்.

பல்வளமுற்று, செல்வமதற்று, சிறந்திலகு பல்லிடமிருந்து, நல்வாழ்வு பெற்று, பல்கலை கற்று, நன்னிலைமை லகித்து, தன்னலம் ஏற்றி, குலநலம் பற்றியவராய் இந்நகர் ஞுகி இவண் குழுமியிருக்கும் பெரியோர்களே! சகோதரப் பிரதிநிதிகளே! வருக வருக; உங்கள் வரவு நல்வரவாகுக. தங்களை வரவேற்கக் கிடைத்த எங்கள் பாக்கியமே பாக்கியம். உங்களைக் காணுந்தோறும் எங்கள் உள்ளத் தெழும் நட்பு மிகு பக்தியை யென்னென்போம்! எவ்வாறெடுத் துரைப்போம்!! தங்களைத் தரிசித்த இன்றே புனிதமாயினேம். இன்னே பெருவாழ்வெய்நினேம்; பேருவகை கொள்கின்றோம், பேரானந்த வாரிநியில் திகழுகின்றோம். எங்களது வணக்கம் தங்கள் அம்பொற்பாதங்களுக்குரித்தாகுக. எங்களோடு பிரியா நட்புற்றிருக்கவும், கூடி அளவளாவியிருக்கவும் அவாவுற்று, நமது வாலிப நாடார் 2-வது மகாநாட்டின் இதுபோது இந்நகர் மேவிய தங்களிடம் இந்நகரின் வளப்பு குறித்து விளம்புவது புகழ்ச்சி வாய்ப்பட்டதல்லவென நம்பி சிறிது உரையாட விரும்புகின்றேன்.

வாலிப நாடார் 2-வது மகாநாட்டிற்கு இடமளித்த இந்நகர் நம்மவர்க்குத் தொன்மையது. பழங் குடிமக்கள் சிலரே யெனினும் தொழில் முயற்சியான் குடி புக்கியோர் அனந்தம். சற்றேறக்குறைய (35000) முப்பத்தையாயிரம் பிரஜைகளைத் தங்கியுளதெனினும் இது விவசாயத்தானும், வியாபாரத்தானும், முக்கியமாய் கைத்தொழிலானும் அவர்களை நன்கு போஷித்து வருகிறது. புராணேதிகாச சம்பந்த மில்லாது போயினும், இப்பதி சிவாலயங்களாலும் விஷ்ணு வாலயங்களாலும் ஸ்ரீ பராசக்தி யாலயங்களாலும், கிறிஸ்தவ கோயில் அல்லா கோயில் ஆயியவைகளாலும் நிரம்பியுள்ளதாகலின் மக்கள் பாரமார்த்தீகத்தன்மைக்கு பெரிதும் இவை அரண் செய்வதாகுவதுபற்றி கழி பேருவகை கொள்வீர்களென்று நம்புகிறேன். நம்மவர்க்குச் சொந்தமான பெரிய வொரு உயர்தரக் கலாசாலையும், கீழ்தரப்பாடசாலை யொன்றும், மற்றும் புறத்தே பல ஆண் பெண் கல்வி ஸ்தாபனங்களும் ஜனங்களின் கல்வித் துறையைப்பண்படுத்தி வருகின்றன. அழகிய நீர் வளிகளும், காஷி மிகு பூஞ்சோலைகளும் வனப்புயர் கட்டடங்கள் பலவும் நகரைச் சிறப்பிக்கின்றன.

வாலிபர் இயக்கமும் மகாநாட்டின் நோக்கமும்.

உலகமோ யுகக்தோறும், காடோனூற்றாண்டுதோறும், ஊரோ வருடந்தோறும், மனிதரோ நிமிடந்தோறும்மாறுதலடையுந் திறத்தான், உயர்ந்தன தாழ்வதும் தாழ்ந்தன உயர்வதும் உலகியல்பாயுள்ளனவெனக் கூறுவதிற் குற்றமல்ல. ஆனால் அதற்காக வானாக்கிடப்படாதும் சோம்பி யிருத்தலும் சால்புடைத்தன்று. தற்காலத்துள் இவ்வித மாறுதல் வாய்ப்பட்ட நாடுகள் நாமறிந்த மட்டில் பலபல. உதாரணமாகக் கூறின், பரி பட்ரந்து உலகமின்னதென வறியாது சோம்பிக் கிடந்த இங்கிலாந்தும், ஜப்பானும், துருக்கியும் இதுகாலை சுகவாழ்வு பெற்று நாட்டு நான் நன்மை மிகுத்து நனி சிறந்து விளங்கா நிற்ப, துர்லப முள்ள நமது இந்திய நாடோ கைகால் இல்லா வெறும் முண்டமெனச் சாற்றுமாறு அத்துணை வலிவிழந்து அவதியுற்றிருப்பது நிதரிசனம். பூமி செழித்த புராதன நன்னாடு; உணவுப் பொருட்களும் உலோகப் பொருட்களும் அபரிமிதமாய் ஈங்ஙக பொன்னாடு; நதிகளும் மலைகளும் நடிவிள்ளும், சோலைகளும் கெழுமிய வளநாடு என வாளுடும் புகழ் இந்நாடு கலியுற்ற வாறுதானென்னே? என எழும் வினவிற்கு நாம் விடைபகரலவிய வவசர மொன்றுமில்லை. இந்திய நாடெனும் வளம் பெற வளர்தோங்கிய விருக்ஷத்தை மேல் நாடுகளெனும் படர் கொடிகள் அண்டி அதன் கிளைகளெங்கணும் சுற்றிச் சுற்றிப் பரவி பூத்துக் காய்த்துப் புனிதமுற்று வந்ததை விடுத்து, பெருமரத்தின் தண்டுகளில் நமது, வேர்களை இறக்கி, தமக்குணவு பெற்று அதன் மூலம் பெரு மரத்தையே இறந்து படச்செய்து தாமும் அதனால் இறந்துபடும் படர் கொடிகள் போன்று மேனாடுகளெனும் அப்படர் கொடிகள் இந்திய நாடெனும் பெருமரத்தினிடத்தே வேரிறக்கி அதன் மூலம் கொழுத்து இன்புறுவதை உலகமே சொல்லும், சொல்லும். இனியும் அவ்வழியில் செல்லுமாயின் முடிவு காண்பதென்ன? பெரு மரமாய இந்திய நாடு இறந்து படுவதோடன்றி அதன் ஆதரவு பெற்று நின்ற அந்த விஷப்படர் கொடிகளாயனேனும் உடன் சாய்ந்து படும் என்பதை எடுத்துக்காட்ட வேண்டுமென்பதல்லாதே விளங்குமன்றோ? நமது குலத்தின் ஆராய்ச்சியை விரித்துப் பார்த்தால் தமிழராட்சியில் பாண்டியன் பரம்பரையில் வந்தவர்களென்பது தேற்றம். அரசிழந்த காலை ஓலுக்கி ஏனையோரால் தன்னப்பட்டதற்கும் சான்றுகள் பலவுள. நமது குலத்தின், நாட்டின் முன்னைய பெருமை குறித்து வானமளாவப் புகழினும் புகழ்ந்து கொண்டிருக்கலாம். அவற்றாலாய பயனென்? ஒன்றுமில். இன்று இந்நிலைக்கு மாற்றமெங்கே; கதி மோக்ஷ மெங்கே என அல்லும் பகலும் அதே சிந்தனை கொள்வதன்றோ அறிவுடையோர் செயலாகும்? வீணே பன்னிப் பன்னிப் பேசிக் கொண்டிருப்பதில் பயனொன்றுமில்லை. இந்நிலையுறுன்ன குலத்தை, நாட்டைத் தட்டி யெழுப்புவது எவர் கடமை? பகிர்முகத்தானும் அந்தர்முகத்தானும் பகைமை சாதிக்கும்வன்கணாளர்களால் இயலாது; உயர்வு தாழ்வு கற்பித்துப் பூசல் விளைக்கும் பேர்வழிகளால் இயலாது; காய்மகாரத்தால் கனன்றுகொண்டிருக்கும் கௌரவாதிகளால் இயலாது; சுருங்கக் கூறுமிடத்து நவீனகம் நவீனகம், நாகரீகம் நாகரீகம் என ஒலியிடும் தற்கால வியலில் முற்கால வழக்கத்தில் தங்கள் வாழ்க்கையின் பெரும் பாகத்தைச் செலவிட்டுவிட்ட வயது முதிர்ந்தவர்களாலும் இயலாது என்றே கூறலாம். மற்றெவரால் இயலும்? அறிவின் களஞ்சியமாயுள்ள ஆன்றோர்களும், மான்மியமுற்ற மேதாவிகளும் வல்லமை மிகுந்த வாலிபர்களால் தான் புத்துணர்வு கொடுக்க வியலுமென அறைகூவுகின்றனர். துருக்கி உணர்ச்சி பெற்றது எவரால்? ஜெர்மனி உயர்வு பெற்றது எவரால்? இத்தாலி உரிமை பெற்றது எவரால்? ஜப்பானியர் செல்வம் கொழுத்தது எவரால்? நேம் தேசியம் பெற்று எழுந்து நிற்பது எவரால்? வாலிபரால்லன்றோ? எனவே நமது தேசம், குலம் க்ஷேமம் பெறப் போதிய அவகாசமும், களங்கமற்ற மனமும், விடாமுயற்சியும், மனோதைரியமும் படைத்த வாலிபப் பருவம் பெற்றவர்களாலேயே ஆகும். இதை யாரும் மறுக்கிலர்.

இனியும் நம் நாட்டின் நன்மை நாடாது வாளாகிடப்பதும், நசன் விட்டவழி யாகட்டுமென சோம்பியிருக்கலும் யானை தன் தலைமேல் மண் வாரியிட்டுக் கொள்வதையே யொக்கும் நமது குலம் தான் எங்கிலையாகும்? குல நலம் தேடவேண்டாமா? பொது நலம் நாடவேண்டாமா? எனவே வீரம் செறிந்த வாலிபர்களே! எழுங்கள்; எழுங்கள். நமது நாட்டை நண்ணுங்கள். நமது குலத்தை எண்ணுங்கள். குல நலத்தைப் பேணுங்கள். பொது நலத்தை யுண்ணுங்கள். நமது ஜாதீய தேசிய முற்போக்கு குறித்து நாடு நலம் பெறவும், நாட்டிலுளோர் வீடு பெறவும் நாடி எழுமின்! விழிமின்!! உழைக்கும் வாலிபர் கூட்டம் இன்றியமையாததென்பது தெள்ளிதின் புலனாயது. இல்வுணர்வு மேலீட்டான், பல பக்கங்களிலிருந்தும் வந்து இவண் வீற்றிருக்கும் தோழர்காள்! உங்களின் ஆர்வமிகுந்த முற்போக்கான எண்ணங்களுக்காகவும், காரியங்களுக்காகவும் எனது நன்றிமையான வந்தனத்தைச் செலுத்துகின்றேன். மேலான நோக்கம் கருதி இவ்விதம் வருடமொரு முறை கூடிக் கலைவதால் மட்டும் யாது நலன் விளைக்க இயலுமென வோர்ந்து சமயத்தை விடாது அவ்வப்போது பணியாற்றி வருவது கடமையாம். ஆரம்பத்தில் ஆங்காங்கு ஜாதீய நலம் நாடிய தனித் தனிப் பெயர் தாங்கிய கழகங்கள் வேணடாமென்பதல்ல. எப்பெயரேடிருப்பினும் அதிற் சேர்ந்து சேவையுரிந்து வருவது வாலிபர்கள் மேல் விழுந்த பாரமாகும். வாலிபரெங்கணும் சேவை செய்ய வீரிட்டுக் கிளம்புங் காலையில், கிறிஸ்தவ மதத்தினர்களுள்ளிருக்கும் ஒய்.எம்.வி.ஏ. போன்ற அமைப்பாக ஆங்காங்கு வாலிபக் கழகங்கள் நிறுவுவதில் ஆக்ஷேபனை யிராதென்றே நம்புகிறேன். இன்றே, இப்பொழுதே முன்வரினும் செய்து முடிக்கலாம். எழுங்கள்; எழுங்கள்.

கல்வி.

தற்காலத்தில் அரசாங்க அனுமதிப்படி நடைபெற்றுவரும் கல்விமுறையை சீர்திருத்தம் செய்ய வேண்டும்; குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று அபிப்பிராயங் கொடுக்கும் சிலர் பொதுவாக விருக்கிறார்கள். ஆனால் சீர்திருத்தம் கிடைக்குமா என்று எங்கியவர்களாய் "உள்ளதைக் கொண்டு நல்லதைப்பாடு" என்ற கதையாக வேறென் செய்வதென்ற முறையில் ஆதரிப்போர் அனேகர். இதே நிலையுள்ள நாமும், நகரங்களில் கல்விக்காக பெரும் பணம் செலவு செய்து ஹைஸ்கூல்களையும், எலிமெண்டரிப் பாடசாலைகளையும், பெண் பாடசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றோம். இவைகள் நகரங்களைப் பொறுத்த மட்டில் சாலுமென நிம்மதியுறலாமென்றால், கிராமங்களில் நம்மவர் படும்பாடு நமது காதுகளைத் துளைக்கின்றன. கிராமங்கள் தான் முன்னணியாக சீர்திருத்தமாக வேண்டும்; ஆங்காங்குள்ள முன்னேற்றம் பெறல் வேண்டும். எனவேகிராமங்களில்கல்விச் சாலைகளைப் பெருக்க மாதம் பத்து ஐந்து பணம் சகாயம் செய்வதோடு சங்கம் திருப்தியடைந்து விடாமல், அவரவர்களைக் கொண்டே நடத்திக் கொள்ளும்படியோ அவசியமானால் சங்கத்தினின்றே பூரா உதவி செய்தோ கிராமங்களில் பேர்தியவாறு கல்சாலைகளை விருத்தி செய்தலில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

பெரும்பாலும் வியாபாரிகளாயுள்ள நமக்கு உயர்தரப் படிப்பு அவசியமா? என்ற கேள்வி நம்மவர் வீடே புகுந்து கொண்டிருப்பதை அறிவேன். பெரும் படிப்பில் தேர்ந்தால் உத்தியோக நாட்டம் தானே; அது வெறும் சேவகாபிவிருத்தி தானே என மொழியலாம். வாஸ்தவந்தான். இதில் முயற்சிக்குத் தகுந்த அவ்வளவு பெரும் நன்மை கிட்டாதொழியினும் அதனால் கேடொன்றுமில்லையே. "உலகத்தோ டொட்டொழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்று ஆன்றோர் உரைத்தவாறு, தினே தினே கல்லூரிகளில் மாணவர்கள் குவிந்து கொண்டும், அதிகாரவர்க்க ஆசை மேலிட்டு உத்தியோகங்களில் குந்த வேண்டுமென்ற விருப்பு மேல் கொண்டும் உலகமிருக்குந் தன்மையில் நம்மவர் எதிலும் பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் ஈடுப்பட்டேயிருத்தல் வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். ஆகவே உயர்தரப் படிப்பாளிகள் நம்மில் அதிகமில்லாக் குறைவாலும் போதிய சாதனமிருக்கிறதென்ற துணிவாலும் விருதுநகர் அல்லது சிவகாசியிலுள்ள ஹைஸ்கூலை கல்லூரியாக்கவாமே என்று கூறுவேன். ஆனால் அவ்வளவு அபாரச் செலவிட்டு கல்லூரி திறப்பதைப் பார்க்கிலும் கூடியவரை முயற்சித்துப் பொருளுதவி செய்து பெயரின் பேரிலாவது வேறு கல்லூரிகளில் சேர்த்தல் கூடாதாவெனக் கேட்கலாம். அவ்விதம் செய்யலாம் தான். ஆனால் நம்மவர் சொந்தக் கல்லூரி இருந்தால் அது வேறு அபிமானந்தான்; அது வேறு ஆசை தான்; அது வேறு ஆர்வந்தான். பணச்செலவு செய்கிறோமே; நாம் படிக்க வேண்டாமா; நாம் படிக்கச்செய்ய வேண்டாமா என்ற ஆசை நம்மொவ்வொருவர்க்கும் மூழுவதுறுதி. உயர்தரப் படிப்பு படித்துவிட்டால் உத்தியோக நாட்டந்தான் என எல்லோரும் ஒரேயடியாகச் சொல்லிவிடுவது பொருந்த மற்றது என்றுதான் சொல்வேன். படித்து வியாபாரம் செய்யலாகாதா? அந்நிய நாட்டுடன் வியாபார சம்மந்தம் வைத்துக்கொள்ளச்சந்தர்ப்பம்கொடாதா? தொழிற்சாலைகளில் சேர்ந்து நிர்வாகம் செய்யலாகாதா? உத்தியோகம் ஒன்றுதானா கதி? இல்லவே இல்லை. அனந்தம் வழிகள் உண்டு. தன் பாஷையின்றி பிறர்பாஷை யறியமாட்டாத ஒரு எஜமானர் தன் நாட்டிலிருந்து பிற நாட்டிற்கோ, பிற நாட்டிலிருந்து தன் நாட்டிற்கோ வியாபார சம்பந்தம் கடத்துங்கால் பிறபாஷையறிந்த தன் குமஸ்தாவின் வாய்மொழியை எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பத்தை மனதில் வருவித்து சிந்திப்போமாயின், இதிற் சங்கை கொள்ளவே மாட்டோம். ஆகவே கூடிய சுறுக்கில் விருதுநகர், சிவகாசி அபிமானிகள் இது விஷயத்தில் சிரத்தைகொள்ள வேண்டுகிறேன். தொழில் மிகுந்தும், ஆராய்ச்சி மிகுந்தும் வினங்கும் மேனாடுகளுக்குச் சென்று, தக்கபடி பயின்று தங்கள் நாட்டிலும் அவ்வகை முயற்சியிலீடுபட்டு முன்னுக்குவந்த ஜப்பானியரென்ன, சீனர்களென்ன இவர்களெல்லாம் தற்கால நவீன முறைப்படி நடந்து சுபிக்ஷமடைந்திருத்தல் போன்றும், கம்மிர்தியர் பலர் சென்று மேன்மை பெற்றதே போன்றும் நம் குல திறம்படைத்த வாலிபர்களையும் அந்நிய நாடுகளுக்கனுப்பிப் பின்னர் யான் சொல்லவிருப்பதுபோல் இயற்கையில் அவரவர் பெற்ற மதுட்ட வழியில் பயின்று வரச் செய்தால் நன்மை பயக்குமன்றோ? தற்போது இவ்வழியில் ஈடுபட்டுள்ளோர் வெகு அற்ப சொற்பமே. இது விஷயத்திற்கு பெரும் பணம் செலவாகுமென்றால் நமது தாய்ச் சங்கந்தான் கவலை எடுத்துக் கொள்வது பொருந்தும். வருடமொரு மாணவர்க்கேனும் வழிவிடல் போதுமானது.

இதுசமயம் மாணவர்களில் லெர் தோழமையால் எம்மிடம் சேர்ந்த முறையீட்டினை ஈண்டு அப்படியே நகுவதைக் குணமாகக் கொள்ளின் கூறுதும். அதாவது, "முக்கியமாய் நமது சமூக நலம் நாடி ஸ்தாபிக்கப்பட்ட நமது பள்ளிச்சாலைகளில் கீழ்வகுப்பு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

களிற்றான் நமது குலச்சிறுவர்கள் முக்கால் வாசி நிரம்பி யிருக்கிறார்கள். மேல் வகுப்புகளிலோ எங்கோ ஒரு சிலரே தொங்கிக்கொண்டிருக்கின்றனர். இவ்விதம் இருக்கால் எவ்விதம் நமது நோக்கம் சித்திக்கும்? பெருமைக்குப் பள்ளிகளை நிர்மாணித்து நமது குலத்தில் மாணவர்கள் அதிகி பூர்த்யாபோ விருப்பது நிஷ்பிரயோசனத்திலன்றோ கொண்டு முடிக்கும்! இது மாணவர்கள் இல்லாக் குறைவுமல்லவே. கீழ் வகுப்பி ல் பெருத்திருந்தவர்கள் மேல் வகுப்பி ல்மட்டும் சிறுத்து வருவதென்ன? ஒருக்கால் எளிய குடும்பத்தினுக்கவர்கள் நின்றிருக்கலாமென்றாம். பணம் படைத்தவர்களிலும் பெருண்டுதான். ஏழைமாணவர்கள்முன்னோர்த்தானே தர்ம பாடசாலைகளை நிர்மாணித்தோம். சொந்தப் பள்ளிகளை தோற்றுவித்தோம். பள்ளியில் இவர்களைக் காணவில்லையாயின் பள்ளிதான் ஏதற்கு? அவசியமானால் அன்னமும் துணியும் கொடுத்து ஆதரிப்பதன்றோ தர்மம்? இது விஷயத்தில் அபிமானிகள் சிரத்தை கொண்டிலர். தாங்களாவது முயற்சித்து ஏராளமான ஏழைப் பிள்ளைகள் தாராளமாய் வரிக்க வழி விடுவதாகாது? இவியும் கவனியாது போயின் மற்றதைத்தாங்களே அறிவீர்" என்று வெகு உருக்கமாகவும் நுரங்குதலாகவும் மொழிந்த வார்த்தைகள் எனது செவியினிற் சேர்ந்து சிந்தை சோர்ச் செய்தன. இக்குறை இருப்பின் உண்மையில் வருந்தற்பாலதே. கடன் விளக்காயினும் தாண்டுகோல் ஒன்று வேண்டுமென்பார்கள். அது போல லித்தியாபிமானிகளாகிய தாண்டுகோலின்றி நமது சிறுவர்கள் மேன்மையுற இயலாது. ஆகவே முக்கியமாய் இறமை வாய்ந்த எளிய பையன்களை கவனித்து அவர்களுக்காக எங்கவழிப்பட்டேனும் (பிரதியுபகாரம் பின்னைய காலத்தில் அவர்களிடமிருந்தேனும் பார்த்தேனும்) பூரணக்கல்வியைக்கொடுக்க நிர்வாகிகளும் அபிமானிகளும் முனைந்து வேலை நடத்துவார்களென்று நம்புவோம். யான் இங்கொன்று சொல்ல விட்டுவிடுவேனுயின் என் கடமையினின்று தவறியவனுவேன். அதாவது நமதுகுலப்பெண்குழந்தைகட்கும் லித்தியாப்பியாசம் செய்து வைக்க வேண்டுமென்பதே. அறிவு விளக்கமான கல்விப்பொருள் அளிப்பதில் ஆண் என்ன; பெண் என்ன; யாவரும் அதில் பங்கு கொள்ள வேண்டியதே. ஆனால் பெண்களுக்கு ஈவிக்கும் கல்வியை வரையறுத்துக் கூற யான் துணியவில்லை. இவில் பலர்க்கும் சங்கை நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அது அரவர் இஷ்டம் எனலாம். ஆனால் பெண்கள் யோக்கிய வழிக்கான கல்வியில் அவர்களைப்பயிற்றுவதை யாவரும் ஆகிக்க வேண்டுமல்லவா? மத சம்பந்தமாகவோ, குடிசைத்தொழில் சம்பந்தமாகவோ எவ்வளவு படிப்பு கொடுக்கினும் குற்றமல்ல. பெண் கல்வி விஷயத்தில் நாம் எச்சரிக்கையுடன் தான் செல்லவேண்டியவர்களாயிருக்கிறோமென்பதை வலியுறுத்திக் கூறாது விடுவேனுயின் அது சுற்றமாய் முடியும்.

கைத் தொழில்.

அருளிலார்க் கவ்வுலகில்லை
பொருளிலரார்க் இவ்வுலகில்லை

என்ற வள்ளுவர் நியதிப்படி இவ்வுலகில் அதிலும் இவ்விருபதாம் நூற்றுண்டில் பணத்திற் கேற்பட்டிருக்கும் பெருமையை விரித்துக்கொண்டுபோனுல் முடிவுதான் காண வியலுமோ? இயலாது. அத்துணை மத்தவம் படைத்த நிரவியத்தை நிரைகடலோடியும் நிரவியம் தேடென ஔவை பிராட்டியாரும் வலியுறுத்தியிருக்கிறார். காலஞ்சென்ற நமது தாதாவாகிய மகா-ள-ள-ஸ்ரீ கூ. மு. அ. வடிவேல் முருகநாடாரவர்களும் "நமது உயர்வு பணத்திலும் படிப்பாலுமிருப்பதல்லாது வேறொன்றில்லை" என நமது வாழ்நாளில் நமக்குச் சதாபோதித்து வந்ததையும் நாம் மறப்பதற்கில்லை. எனவே பணம் தேடுதல் ஒவ்வொருவருடைய கட்மையெனக் கொள்வதில் அநந்தான தவறுகள் யாவை என துகரின், குற்ற மற்றதும், பாவகரமற்றதும், சுயேச்சையுள்ளதும், யோக்கியமுள்ளதும். கஷ்டமின்றி லாபவழி விடுவதும், சீர்த்திதருவதும், அறிவு விளக்க மளிப்பதுமான கைத் தொழில் ஒன்றே ஒப்புயர்வற்ற துறையாக விருப்பது விளங்கும். நமது நாட்டிலே மூலப் பொருள்கள் பெற்றுச்சென்று அதைக்கொண்டு பல அவசியப் பொருள்கள் செய்து நம்மிடமே விற்று முதல் செய்யும் மேல் நாட்டிற்கு செல்லப் பெருக் கேற்பட்ட தெதனுல்? கீழ் தேசங்கள் யுத்த பின்னிதுலாக பணமும் பலமும் படைத்து ஆர்ப்பரிப்பது எதனுல்? நாம் மென்று உமியும் வெறும் சக்கையையும் பச்சுவப் படுத்திப் பணம் நிரட்டும் கைதொழில் மென்மையன்றோ? என்னே கைத்தொழிலின் அருமை, அருமை! அதைச் சொல்லுவதில் நமக்கு மிகப் பெருமை எம்பதில் என்ன பேதமிருக்கிறது? எத்தனை ஏழைகளுக்கு எத்தனை அங்க வீனர்க்கு யோக்கிய முறையில் உணவளிக்கிறதென்று நினைக்கிறீர்கள்? கணக்கற்றவர்க்கு எண்ணிக்கையற்றவர்க்கன்றோ உணவளிக்கிறது? உலகப் பிரசித்தி பெற்ற அமெரிக்கா போர்டு மோட்டார் தொழிற்சாலையில் கண்ணிழந்தவர்களும், காது கேட்காதவர்களும், காலிழந்தவர்களும், கைஇழந்தவர்களுமாக ஆயிரக் கணக்கான பேர்கள் வேலை செய்து சுகவாழ்வு நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கேற்ற அக்கைத்தொழிலின்றேல் அவர்கள் கதி என்னும்? கைத்தொழிலில் எத்துணை மேன்மை யிருக்கிறதென்று பாருங்கள்! உற்று நோக்குங்கள்; உய்த்துணருங்கள். மான்மியமுற்ற இக்கைத்தொழிலை சமீப காலமாய்த்தான் ஒருவாறு நாம் அறிந்துவருகிறோம். அறிந்தும் துணிந்து மூலதனம் எடுப்பார் நம்மில் அருகிய தன்மைதான். எங்கோ ஒன்றிரண்டு அற்பசொற்ப தொழிற்சாலைகளை ஏற்படுத்தி விடுவதால் திருப்தியடைந்து விட முடியாது. அதனுலும் பெரும் பயன்கிடைத்து விடுமென்பதல்ல. கைத்தொழில் அரும்பியிருக்கும் நமது நாட்டில் மேனுடேபோல் பல கூட்டுக் கைத்தொழில்களை ஏன் ஏற்படுத்தல் கூடாது? எதற்கும் ஆரம்பத்திலேயே அதிக லாபம் கிடைக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பது பேதமை. வரவாவலுப்பட்டு எதிர் பாராமலே பெரும் பயன் தானே அளிக்குமன்றோ? பாருங்கள்; எவ்வளவோ பிரயாசையின் பேரில் முதலில் தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்ட நமது நாடார் பாங்கு ஆரம்பத்தில் பங்காளிகளுக்கு 4, 5 வட்டி கொடுத்து வந்து தற்போது 8% வட்டி கட்டுகிறதென்றால் அது விஷயத்தில் முன்னர் நாம் உற்ற மயக்கத் தினின்றும் தெளிவு பெற்றோமென்பதில் என்ன குற்றமிருக்கிறது? அப்படியே நமது நாட்டில் ஸ்தாபிதமாகி வரும் பல கூட்டுக் கம்பெனிகளிலும் ஏற்பட்ட பங்குத் தொகையின் மதிப்பு பிக்கிய நாட்களில் அதிகரித்துப் போவதை நாம் பார்த்தே வருகிறோம். எனவே கூசாமல் நம்பிக்கையான பல தொழிற்சாலைகளிலும் நாம் பங்கெடுப்பதில் பின் தங்கலாகாது. நம்மவர்க்குள்ளும் பலதொழிற்சாலைகளை நிர்மாணித்தல் அவசியமும் அவசரமுமாகும். துணிவின்மையால் நிடசித்த மின்மையால் கைத்தொழிற் பெருமையினை அறியாத்தன்மையில் நூறாண்டுகட்கு முன்னர் நாம் மதிமோசம் போன பிரச்னை யொன்றைத் தன்மை பாராட்டி நண்டு கூறுவதுபற்றி மனவருத்தமுற மாட்டீர்களென்று நம்புகிறேன். கைத்தொழில் மேன்மை கருதி பெரும் பொருள் செலவு செய்து அந்நிய நாடுகள் பலவற்றிற்குச் சென்று தொழிலில் நிபுணத்துவம் பெற்று இலங்கையில் பிரபல ஆலை யொன்றமைத்துப் பல தொழில்களுக் கூடே பச்சைத் தேங்காயெண்ணெய் சோப்பு, வாசனைத் திரவியங்கள் முதலானவைகளைப் பெரும் ஊழியத்தரத்தக்கவாறு தயார் செய்து பல நற்சாக்ஷிகளும், நன்மதிப்புகளும் பெற்றிருக்கிற ராஜா கிறிஸ்டியன் தேவவரம் நாடார் அவர்களை நாம் அறிவோம். நம்மவர் வசிக்கும் பல விடங்கட்கும் அன்னார் விஜயம் செய்து யேரில் தம்மிடமுள்ள கைத் தொழில் வன்மையை விளக்கி வந்ததையும், திருநெல்வேலியில் பனை சம்பந்தமான பல விதக் கைத் தொழில்களையும் கைக்கொண்டு நம்மவர்களையே பங்குதாரர்களாகச் சேர்த்து பெரிய ஆலை யொன்றை நிர்மாணிக்கத் தனக்குள்ள ஆசையையும் ஆர்வத்தையும் எடுத்துச் சொல்லி வந்ததையும், அதற்காக இலங்கைவிட்டு இந்தியாவந்து பலரையும் கண்டு பேசி கம்பெனிஸ்தாபிக்க நிரம்பச் செலவு செய்ததையும் நாடு, கண்கொண்டு பாராது, வானாக்கிடந்த—சோம்பியிருந்த நம் மதிதான் என்னே! அப்பெரியாரை அவமதியம் செய்த நமதறிவு தான் என்னே!! தேடினும் கிடையா அவ்வுந்தமர் நம்மை நாடி வந்த காலையும் நம்மைப் பெரிதும் மதித்து நம்பிவந்த காலையும் என்ன காரியம் செய்து விட்டோம்!!! அவர்களின் அறிவுதான் என்னே! ஆற்றல் தான் என்னே!! எவ்வெவ்வேலை எவ்விதம் கிடைப்பினும் இன்றே அவர்களைக்கொண்டு நாம் அனைவரும் போதிய ஆதரவு கொடுத்து உடனே என் தொழிற்சாலை யொன்றை ஏற்படுத்தக் கூடாது? யாவரும் முனையுங்கள்; சிரத்தை கொள்ளுங்கள். அவ்வாறால் நமமவர் எத்தனை பேர்க்கோ நாணயத் தொழில்கிட்டுமன்றோ? வீணே அதை விட்டு விடுங்கள் என்று சங்கம் கோவிப்பதால் யாது பயன்? என்று நாம் சீர் நிருத்தம் வேண்டுமெனவிரும்புவோமோ அன்றிருந்து நாம் கைக்கொள்ள வேண்டிய வேலைகள் இரண்டுண்டு. ஒன்று நாச வேலை. மற்றொன்று நிர்மாண வேலையாகும். இவை ஒன்றைவிட்டு ஒன்றிருப்பதால் யாது பயனுமளிக்காது. இரண்டும் சேர்ந்தே நடக்க வேண்டும். அப்போது தான் கோரிய பலன் சித்திக்கும். எனவே மரியாதையற்ற, யோக்கியமற்ற தொழிலை என்று நாம் விட நாச வேலையில் பிரசாரம் செய்கின்றோமோ அன்றே அவர்கள் புதிய துறையிலிறங்க நிர்மாண வேலையீடுபட்டுத் தொழில் முயற்சி யொன்றைக் காண்பிக்க வேண்டுமென்பது இனிது புலனுகிறதன்றோ? அவ்வகை நிர்மாண வேலையை இதுவரை நாம் நம்மவர்க்காக எங்கு காட்டியிருக்கிறோம்? என்ன செய்யலாமென்று நினைக்கிறீர்கள்? அது ஏன் ஒரு பெரிய (பனை சம்பந்தப்பட்ட சகல கைத் தொழிலோடும் கூடிய கைத் தொழிற்சாலையை நிர்மாணித்தலா யிருக்கக்கூடாது? என்று கேட்கிறேன். அங்கு தான் செல்வமிருக்கிறது. அங்குதான் சிறப்பிருக்கிறது. உண்மையில் நமக்கு அபிமானமும் ஆத்திரமும் இருக்குமேல் இவ்வித ஆலைகளில் நமது மனம் திரும்புவதாலன்றி கதி மோட்சம் வேறில்லை என்றே துணிந்து கூறுகிறேன்.

இன்னும் கைத் தொழிலில் போதியவாறு நம்மவர் ஊக்கம் செல்லாதிருப்பதற்குப் பழக்கமின்மையேகாரணமாகக் கூறலாம். கைத்தொழிலில் மிகுந்த சிரத்தை கொள்ள வேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புவதால் கட்டாயப் பாடமாய் ஏற்படுத்தி நமது பள்ளிக்கூடங்களில் கைத் தொழிற் கல்வியைப் போதித்து வரலாமல்லவா? போதித்துவரின் இளமையிற் பற்றிய பழக்கம் முதுமையில் தானே தித்திக்கு மென்பதில் சங்கையின்று. பின் தூண்டுதல் வேண்டுமென்பது மற்றவிடும். தொழில் முயற்சி கைகூடும்.

நமது நாடுள்ள நிலைமையை அறிந்து ஏழைகள் பசி தீர்ப்பதும், இந்தியர்க்கு கதிமோட்ச மளிப்பதுமான கதர் கைத் தொழிலை அபிவிருத்தி செய்யுமாறு உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் சாற்றியபடி உலகம் அவ்வண்மையறிந்து திருந்தும் இது போது நம்மவருக் அதைப் பின்பற்றியே வருகிறார்கள். இக்கதர் கைத் தொழிலை விருத்தி செய்ய வேண்டிய தவசியமாய் வரவர நானடைவில் திருந்துவதால் நம்மவர்க்குள் கதர் கைத் தொழிற்சாலை யொன்றை ஏற்கனவே அதில் பயின்றுவரும்திசையன் விளையிலாவது, மதுரை அல்லது அருப்புக்கோட்டையிலாவதுஏற்படுத்துவதால் நாட்டுக்குபகாரமும் நமக்கு லாபமும் ஏழைகளுக்கு கூலியும் கிடைக்கும். மறறும் தீக்குச்சி, சோப்பு மெழுகுவர்த்தி முதலிய சிறு கைத் தொழில்களையும் அதிகமாய் ஆரம்பித்தல் வேண்டும்.

இது விஷயத்தை ஆராய்ச்சியுடன் கவனிக்கப்பிரதிநிதியேகமாக ஓர் கமிட்டியை சங்கம் நியமித்து எங்கு எவ்வெத் தொழிலை ஆரம்பிக்கலாமென்று நிதானித்து வேலை நடத்த வேண்டுமாய் பன்முறை பணிவுடன் வேண்டுகிறேன்.

வியாபாரம்.

வியாபாரத்திலேயே பெரும் பகுதியினர் ஈடுபட்டு கூடியவரை இத் துறையில் விருத்தி முகம் காட்டிவரும் நம்மவரிடத்தே வியாபாரத்தைப்பற்றி யான் என்ன சொல்லவிருக்கிறேனென்பதைக் கேட்க, மிகுந்த ஆவலுற்றிருப்பீர்களென்று எனக்குத் தெரியும். ஆனுல் அவ்வளவாக அனுபோகமில்லாத என்னிடமிருந்து தாங்கள் எதிர்பார்க்குமளவு யான் என்ன சொல்லிவிடப்போகிறேனெனச் சிந்தையுறுகிறேன். என்றாலும் எனதறிவுக்கெட்டிய ஒரு சில விஷயத்தை மட்டில் தங்கள் ஆலோசனைக்குக் கொண்டுவர அவாவுறுகிறேன்.

நாம் தனித்தனி நபராக சிறுத்து வியாபாரம் நடத்திவருகிறக, பங்குகள் சேர்த்து நிரண்ட பணங்கொண்டு நிறம்படைத்த நுட்பமறிந்த மேதாவிகளை வைத்து மொத்த வியாபார ஸ்தலங்களை கூட்டுக் கம்பெனியாக ஸ்தாபிப்பதில் கஷ்டமோ நஷ்டமோ இல்லாத நிலைமையில் இதை ஏன் கவனிக்கவில்லையென்று தெரியவில்லை. இதில் கட்டம் வரினும் பலரைப் பொறுத்து நிற்பதால் அதைக் கவியலாது. அதனுல் ஒருவரேனும் கெட்டுவிட்டார்களென்ற பேச்சேயிருக்காது. தனி நபர் அவ்வகை வியாபாரத்தில் ஈடுபடுவது எப்போதும் ஆபத்துத்தான். இதையறிந்தே மேல்நாடுகள் அனைத்தும் லிமிட்டெட் கம்பெனிகளை ஸ்தாபிக்கின்றன. முக்கியமாய் துறைமுகப் பட்டணங்களிலேனும் கூட்டு வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்த வேண்டும். நமது மாகாணத் தலைநகராமிய சென்னை பட்டணத்தில் நம்மவர் இதுவரை வியாபார ஸ்தலம் ஸ்தாபித்திலர். இது பெருங் குறையாகும். இக்குறை நிவர்த்திக்கக்கூடிய வழி நிறக்க சீமான்கள் முன் வர வேண்டும். கூட்டு வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். அதாவது சீரைக்கடைக்கு எதிர்க்கடை போடும் வழக்கம் நம்மில் தலைகாட்டி வருகிறது. இது கூடவே கூடாது. இதனுல் வியாபாரச் செட்டு கெட்டு, போட்டி பலத்து கஷ்ட முறவே ஏதுவாகிறது. இப்பிரச்னைக் கிடமின்றி நடந்துகொள்ள மூலதாரத்திலே நாம் கவனிக்கவேண்டிய காரியமொன்றுண்டு. அதாவது, நமது சிறுர்களுக்கு அவர்களின் தன்மை அறிவு பற்றி பொருத்தமுள்ள ஒரு தொழிலைக் காண்பிப்பது பெற்றோர்களின் கடமையாம். அவ்விதம் காண்பிப்பதில் அவன் மகன் அவனுவதை அறவே யகற்றல் வேண்டும். ஒரு வர்க்கு வியாபாரத்திலோ, மற்றொரு வருக்கு வைத்தியத்திலோ, இன்னொருவருக்கு கைத்தொழிலிலோ, பிறிதொருவருக்கு உத்தியோகத்திலோ புத்தி நுட்பம் வாய்ந்திருக்கலாம். பெற்றோர்கள் அவரவர் பெற்ற மதிநுட்ப வழி செலுத்தலே அவர்களை நேரில் வழி நடத்தி மேன்மையும் சீர்த்தியும்பெறச் செய்வதாகும். இதை விடுத்து வியாபார நுட்பமுள்ளானை வியாசாயத்திலும், கைத்தொழில் நுட்பமுள்ளானை உத்தியோகத்திலும் நுழைப்பது அவலக்ஷணமுள்ள ஒருவனை சந்ருகுந்தரமென்றும், மகா தாரித்திரிய ஒருவனைக் குபேரனென்றும், பிறவாழப் பொருத்த பேர்வழியை குணசீலனென்றும் அழைப்பதற் கொப்பாகுமல்லவா? மேற் குலத்தானெனச் சொல்லப்படுவோனின் மகன் அடாது பல வியற்றினும் அவன் மேற்குலத்தவனே; கீழ்குலத்தானெனச் சொல்லப்படுவோனின் மகன் சன்மார்க்கத் தவமியற்றினும் அவன் தாழ்ந்தவனே என்று வெகு காலமாக இருந்துவந்த நமது நாட்டின் போக்கும் நலை கவிழ்ந்த இது காலத்தே, தன் கையே தனக்குதவியென்பதை தனக்கு வாய்த்த இயற்கை மதிகொண்டு நமது மதி நுட்ப வழி நின்று தொழில் நடத்த நலை சாலச் சிறந்த தென்பேன். எனவே ஒப்பந்தமாக வியாபாரத்தைக் கொண்டுசெலுத்துவதில் தான் சுபிக்ஷமிருக்கிறது. அவ்வழியைக் கையாடுவோமாக. வியாபாரக் கூட்டுறவுச் சங்கங்கள் மிக மிக அவசியமெனக் கூறுவேன். இவையின் ஈடுபட்டால் ஐக்கியமும், பலமும் உண்டாம்.

விவசாயம்.

மக்களின் உயிர்நிலைக் காதாரமான உணவுப்பொருளைப் பெறும் தொழிலாய இவ்விவசாயத்தின் மேன்மை பற்றி பெரியோர்களெல்லாம் வெகு சிலாக்கியமாய்த் தான் கூறிப்போந்தனர். வாஸ்தவமே. விளைபொருள் மத்திமமாய் இருந்தால் நாட்டில் பஞ்சம் தலைகாட்டுவதை நாம் நன்கறிவோமன்றோ? ஏனவே விவசாயத்தில் எவ்வளவு சிரத்தை யெடுத்தாலும் தகும் தகும்.

(இன்னும் வரும்.)